# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

அக்டோபர் - 2015
பருவம் 2 புனல் 13

தனிச்சுற்றுக்கு
நன்கொடை ரூ20



# திறனாய்வு மலர்



காட்டாறு
அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

**தொகுப்புக்குழு**
யாழ் மொழி
பெரியார் செல்வி
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
அ.ப. சிவா
செல்லையா முத்துச்சாமி
மே.கா. கிட்டு
பூ. மணிமாறன்

**ஆசிரியர்**
சி. இராவணன் 97868 89325

**உரிமை & வெளியீடு**
சி.விஜயராகவன்

**சட்ட ஆலோசனைக்குழு**
வழக்கறிஞர் க.ஜெயராஜ்
வழக்கறிஞர் வெ.பழனிச்சாமி
வழக்கறிஞர் பிரபாத்

**விளம்பரத் தொடர்பு**
சி. விஜயன் 94881 79109,
ஜீவாநகர் குமார் 99944 77013

**விற்பனைத் தொடர்பு**
ஆ. பாண்டியன் 96591 12891,
கடத்தூர் காந்தி 99428 76665
வெங்கட் 95788 44141

**சந்தா தொடர்பு**
அ. கிருட்டிணகுமார்
97882 97428

**வடிவமைப்பு**
Mukizh Media

**அச்சு**
செல்வக்குமார்
BS Graphics, Chennai

**ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு**
காட்டாறு, 1 / 810
முத்தமிழ்நகர், நத்தம் சாலை,
திண்டுக்கல். 624003
kaattaaru2014@gmail.com

# குடி அரசுப் பள்ளிகள்

காட்டாறு திறனாய்வு மலருக்கு வந்துள்ள திறனாய்வுகள் எமக்கு மிகுந்த உற்சாகத்தையும், அளவுகடந்த பயத்தையும் உண்டாக்கியுள்ளன. மாற்றுக்கருத்துக்களை - மறுப்புக்கருத்துக்களைக் கொண்டுள்ள கட்டுரைகள் நமக்கு உற்சாகத்தை அளிக்கின்றன. ஏனென்றால் மாற்றுக்கருத்துக்களைக் கொண்டுதான் நமது நிலையைத் தெளிவாக ஆய்வுசெய்துகொள்ள இயலும்.

பாராட்டி வந்த கட்டுரைகள், பாராட்டும் அளவுக்கு நாம் நடந்துகொள்ள வேண்டும் என்ற பயத்தை உண்டாக்கின. அதாவது 'எதையும், யாரையும் சார்ந்து நிற்காமல், எந்தக் கட்டுக்குள்ளும் சிக்காமல், எமக்குத் தெரிந்த அளவில் பெரியாரைத் தற்காலச்சூழலோடு பொருத்திக் காட்டுவது' என்பதை மட்டுமே காட்டாற்றுக்கு அடிப்படையாக வைத்தோம். அந்த நிலையைத் தொடர வேண்டுமே என்ற பயம். தொடர்வோம்.

இந்தத் திறனாய்வு மலரில் சில கட்டுரைகள் பெரியாரையும் விமர்சித்து வந்துள்ளன. அவை முற்றிலும் திறனாய்வாளர்களின் கருத்துக்கள் மட்டுமே. காட்டாறுக்கு அவற்றில் உடன்பாடு கிடையாது என்றாலும், மாற்றுக் கருத்துக்களைத்தான் நாம் விரும்பி வரவேற்றோம். எனவே அவற்றை எந்தத் திருத்தமும் செய்யாமல் அப்படியே வெளியிட்டுள்ளோம். அடுத்தடுத்த இதழ்களில் பெரியார் மீதான ஒரு சில விமர்சனங்களுக்கு நமது தரப்பிலான விளக்கங்கள் வெளியிடப்படும். சில கட்டுரைகளுக்கு மாற்றுக்கருத்துக்கள் வந்துள்ளன. அந்தக் கட்டுரைகளை எழுதிய தோழர்களிடமிருந்து விளக்கங்களைக் கேட்டுப் பெற்று வெளியிடுவோம்.

காட்டாறுகுழுவினர் 'ஏற்கனவே அறிவித்த பணிகள் எதையும் செய்துமுடிக்காமல் அடுத்த பணியைத் தொடங்கக்கூடாது' என்பதில் உறுதியாக உள்ளோம். அந்த அடிப்படையில் காட்டாறு சந்தா சேர்ப்பை முடித்தோம். திறனாய்வு மலர், அதற்கான நிதிதிரட்டல் என திட்டமிட்ட வேலைகளைச் சரியாக முடித்துள்ளோம். பெரியாரியல் கடமையில் இந்தத் தலைமுறைக்குரிய முதன்மைப் பணியாக 'அடுத்த தலைமுறைக்கு அறிவாயுதம்' என்ற பெரியார் எழுத்தும் பேச்சும் இணையதளத் தொகுப்புப்பணியை அறிவித்தோம். இணையதளங்களில் தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் பெரியார் கருத்துக்களைத் தரவேற்றம் செய்வது; அவற்றை இலவசமாக கிடைக்கச்செய்வது; எளிதாக அணுகக்கூடிய தொழில்நுட்பத்துடன் செய்வது என்ற நோக்கத்தில் செயல்களைத் தொடங்கினோம்.

## அடுத்த தலைமுறைக்கு அறிவாயுதம்

2015 ஜூலை 1 ம் நாளில் இருந்து பணிகளைத் தொடங்கினோம். முதற்கட்டப் பணிகளை செப்டம்பர் 17 க் குள் முடிப்பது எனத் திட்டமிட்டோம். தாமதமாகிவிட்டது. காட்டாறின் இரண்டாம் ஆண்டு தொடக்க விழாவில் முதற்கட்டப் பணிகளை முடிந்து www.periyarwritings.org அறிமுகப்படுத்தப்படுகிறது.

'அடுத்த தலைமுறைக்கு அறிவாயுதம்' என்ற அறிவிப்பை நாம் வெளியிட்ட நேரத்தில், திராவிடர் விடுதலைக் கழகத்தின் அதிகாரப்பூர்வ இணையதளமான www.dvkperiyar.com என்ற தளத்திலும் பணிகள் தொடங்கிவிட்டன. அதில் 1925 முதல் 1938 வரை குடி அரசு, பகுத்தறிவு, புரட்சி, ஏடுகளில் வெளியான ஏறத்தாழ 2631 கட்டுரைகள் யூனிகோட் மற்றும் பி.டி.எஃப் வடிவங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதற்காக திராவிடர் விடுதலைக் கழகத்தைப் பாராட்டுகிறோம்.

புதிய இணையதளமான www.periyarwritings.org யில் 1925 – 1938 காலங்களில் வந்த கட்டுரைகளும் கூடுதலாக 1938 க்குப் பிறகு பெரியார் பேசிய சுமார் 600 கட்டுரைகளும் பதிவேற்றப்பட்டுள்ளன. திராவிடர் கழகத் தோழர் பழனி மாரிமுத்து ( தமிழ் ஓவியா ) அவர்கள் நமக்கு அவற்றைத் தந்து உதவினார். கீற்று இரமேஷ் அவர்கள் www.keetru.com இணையதளத்திலிருந்தும் ஏராளமான கட்டுரைகளை நமக்குக் கொடுத்துள்ளார். ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்ட 30 கட்டுரைகள் உள்ளன. ரிவோல்ட் ஏட்டில் பெரியாரின் கால எழுத்தாளர்கள் எழுதிய ஆங்கிலக்கட்டுரைகள் என ஏறத்தாழ 4000 கட்டுரைகள் நமது தளத்தில் உள்ளன.

நாம் இந்தப் பணியை அறிவித்த போது பெரியார் எழுத்துக்களை இணையதளங்களில் தேடினால் தமிழில்கூட வெகு குறைவான உரைகளே கிடைத்தன. ஆனால் இப்போது ஆயிரக்கணக்கான பக்கங்கள் கிடைக்கின்றன. காட்டாறு அறிவிப்பால்தான் இவை நடந்தன என்று சொல்லமுடியாது. ஆனால் காட்டாற்றின் எண்ணம் வெற்றிபெற்றுள்ளது என்பதை உறுதியாகக் கூறலாம்.

www.periyarwritings.org இணையதளத்தை முழுமையாக வடிவமைத்துக் கொடுத்தவர் கீற்று இரமேஷ் அவர்கள் தான். அவரது கடுமையான பணிச்சூழல்களுக்கிடையே முழுமையான நன்கொடையாக இந்தத் தளத்தை அவர் வடிவமைத்துள்ளார். தொடர்ச்சியாக தொழில்நுட்ப ரீதியாகப் பலசிக்கல்கள் வந்தபோதும் உடனடியாகத் தலையிட்டுச் சரிசெய்தும் கொடுத்தார். அவரது மிகப்பெரும் ஒத்துழைப்பால்தான் இந்தப் பணி நிறைவேறியுள்ளது.

முதற்கட்டமாக தமிழில் பதிவேற்றும் பணி தேவையான அளவுக்கு நிறைவேறியுள்ளது. ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்து வெளியிடும் பணி நாம் எதிர்பார்த்ததைவிடக் கடுமையாக உள்ளது. தோழர்கள் பிரபா அழகர், கணியூர் தமிழ்ச்செல்வன், யோகேந்தர், மணிப்பிரகாசம், யாழ்மொழி, பேராசிரியர் சுபா, பிரேம பிரபா பேராசிரியர் புதுச்சேரி இராமக்கிருட்டிணன் எனப் பலரும் இதற்காக முயற்சி எடுத்துவருகின்றனர். ஒரு சில கட்டுரைகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன. விரைவில் அனைவரது ஆங்கில மொழியாக்கக் கட்டுரைகளும் பதிவேற்றம் செய்யப்பட உள்ளன.

இதில் நமக்கு எதிர்பாராத இன்ப அதிர்ச்சியைக் கொடுத்தவர் புதுச்சேரி பல்கலைக்கழகப் பேராசிரியர் த.மார்க்ஸ் ஆவார். அதாவது, தோழர் பெரியார் குடி அரசு, விடுதலையில் எழுதிய சில முக்கியக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்து 'On Caste and Religion: Thanthai Periyar' என்ற ஆங்கில நூலை வெளியிட்டுள்ளார்.

தோழர்கள் பெரியகுளம் குமரேசன், யுகேந்தர் ஆகியோர் அந்தத் தகவலை நமக்கு அளித்தனர். அவற்றின் அடிப்படையில், நேரடியாகப் பேராசிரியர் த.மார்க்ஸ் அவர்களைப் புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் சந்தித்தோம். நமது பணி பற்றி அறிந்ததும் மிகவும் மகிழ்ச்சியாக, உடனடியாக அவரது ஆங்கிலப்புத்தகத்தை நமக்கு வழங்கினார். அடுத்த ஒரு வாரத்திற்குள் நமக்குத் தட்டச்சு செய்யும் வேலையைக்கூட வைக்காமல் அந்தப் புத்தகத்தின் தட்டச்சு செய்யப்பட்ட கோப்பையே ( Soft Copy) நமக்கு அனுப்பிவிட்டார்.

மேலும் கூடுதலாக "இந்த 20 கட்டுரைகள் மட்டுமல்லாமல் பெரியாரின் மிக முக்கியமான – இப்போது தேவையான கட்டுரைகள் என இன்னும் பல கட்டுரைகளை நீங்கள் தேர்வுசெய்து அனுப்புங்கள் அவற்றையும் ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்து தருவேன்" என்றும் உறுதிகூறினார். இவரைப் போன்ற கண்ணுக்குத் தெரியாத நண்பர்கள்தான் பெரியாரியலின் பலம்.

இன்றைய நிலையில் பெரியாரைப் பற்றி தமிழிலும், ஆங்கிலத்திலும் மிக அதிகமான கட்டுரைகளை இலவசமாக வழங்கும் இணையதளமாக www.periyarwritings.org உள்ளது. முக்கியமாக எந்தத் தலைப்பில் வேண்டுமானாலும் தேடிப் பெற்றுக்கொள்ளும் வசதியும் இந்தத் தளத்தில் உள்ளது. அதாவது இணையதளத்திற்குள் உள்ள Search பகுதியில் 'சேரன்மகாதேவி' என தட்டச்சு செய்து தேடினால் சேரன்மகாதேவி பற்றி குடி அரசு, புரட்சி, பகுத்தறிவு, விடுதலை ஏடுகளில் உள்ளவை அனைத்தும் கிடைக்கும்.

அடுத்து இந்தி மொழியாக்கம் இதற்கு ஆட்களே கிடைக்கவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கிறோம். இருந்தாலும் முயற்சியைத் தீவிரமாக்கி பணியை முடிப்போம். தற்போது முதற்கட்டப் பணிகள் முடிவடைந்துவிட்டன. இனி தமிழ்க்கட்டுரைகள், ஆங்கிலக் கட்டுரைகள் அனைத்தையும் தலைப்புவாரியாக ஒழுங்குபடுத்தும் பணியும், இன்னும் கூடுதலான கட்டுரைகளைத் தேடிப் பதிவேற்றும் பணியும் நடைபெற உள்ளது.

இந்தத் தளம் காட்டாறுக்கோ, எந்த தனிப்பட்ட நபருக்குமோ, எந்த அமைப்புக்குமோ உரிமையானது அல்ல. அனைவருக்கும் பொதுவானது. யார் வேண்டுமானாலும் இலவசமாக இதன் கட்டுரைகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம். Periyar Web Version என்ற பெயரில் ஒருங்கிணைந்துள்ள தோழர்கள் தொகுப்புப் பணியை மேற்கொள்கிறார்கள். பணிமுடிவடைந்ததும் அந்த ஒருங்கிணைப்பும் கலைக்கப்படும்.

இதற்காக – இணையதளத் தொகுப்புப் பணியை முழுமையாகக்குவதற்காக நாங்கள் ஏற்கனவே அறிவித்தது போல அனைத்து திராவிடர் இயக்கத்தலைவர்களையும், இப்பணியில் உடன்பாடுள்ள தோழர்களையும் சந்திக்க உள்ளோம். முதற்கட்டப் பணியை

முடித்துவிட்டு அதன்பிறகு தலைவர்களைச் சந்திக்கலாம் என்ற முடிவில் இதுவரை எவரையும் சந்திக்காமல் இருந்தோம். இந்தப்பணி எம்மைப் போன்ற எளியவர்களால் முடிக்கக் கூடிய பணி அல்ல. பெரியாரியலில் முழுமையான புரிதல் உள்ள அறிஞர்களும், தலைவர்களும், தோழர்களும் இணைந்து முடிக்க வேண்டிய பணி. எனவே அனைவரும் ஒத்துழைப்புக் கொடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கிறோம்.

### குடி அரசுப் பள்ளிகள்

காட்டாறு குழுவின் அடுத்தபணி. நாங்கள் பதிவேற்றிய பெரியார் கட்டுரைகளை முதலில் நாங்கள் படிப்பது. பெரியாரை முதலில் முழுமையாகப் படிப்போம், இந்த மக்களுக்கு, அறிவியல்ரீதியாக பெரியாரியல்தான் சரி என்றால், முதலில் எங்கள் சொந்த வாழ்வில் கடைபிடிப்போம். அதை மற்றவர்களும் கடைபிடிக்கப் பரிந்துரைப்போம்.

2011 ஆம் ஆண்டு குடி அரசுத் தொகுப்புகள் வெளியான நேரத்தில் கீற்று இணையதளமானது, குடி அரசுத் தொகுப்புக்களைப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் விதத்தில் சென்னையில், 'பெரியாருடன் ஒரு பயணம்' என்ற பெயரில் ஒரு கருத்தரங்கை நடத்தியது. கீற்று தொடங்கிவைத்த அந்தப் பயணத்தை நாம் தொடர்ந்திருக்க வேண்டும். இனியாவது அப்பயணத்தைத் தொடங்கலாம் என முடிவு செய்துள்ளோம்.

'குடி அரசுப் பள்ளி' என்ற பெயரில் தொடர்ச்சியாக பெரியாரியல் வகுப்புக்களை நடத்த உள்ளோம். 'குடி அரசுப் பள்ளி' என்பது ஒரு தனி அமைப்பு அல்ல. தமிழ்நாடு முழுவதும் ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்பும் அல்ல. 'பெரியாருடன் ஒரு பயணம்' என்பதைப் போன்ற ஒரு நிகழ்வின் தலைப்பு அவ்வளவுதான். யார் வேண்டுமானாலும் இந்தப் பெயரைப் பயன்படுத்தி பெரியாரியல் வகுப்புக்களை நடத்தலாம். பெரியார் நூல்களை, இணையதளத்தில் கிடைக்கும் குடி அரசுக் கட்டுரைகளை அவரவர்களே படித்து அதுபற்றிய விவாதங்களை மேற்கொள்ளும் இடமாக குடி அரசுப் பள்ளிகள் இயங்கலாம்.

ஒருவர் மட்டுமே பேசி, மற்றவர்கள் கேட்டுக்கொண்டு மட்டுமே இருக்கும் தற்கால வகுப்புகள் போல அல்லாமல் - விவாத அரங்கங்களாக, ஜனநாயகப் பள்ளிகளாக - குடி அரசுப் பள்ளிகள் செயல்படவேண்டும். அந்த ஒரு பண்பு மாற்றம் மட்டும் பொது அடையாளமாக இருக்க வேண்டுமென விரும்புகிறோம். பெரியாரைப் படித்துவிட்டு, பெரியார் சிந்தனைகளின் அடிப்படையில் தோழர்கள் அம்பேத்கர், மார்க்ஸ், மாவோ, பூலே, சாகுமகராஜ் என அனைவரையும் படிப்போம்.

ஜாதிபலம் - கல்விபலம் - பணபலம் - செல்வாக்கு - மேல்மட்டத் தொடர்புகள் - அமைப்புகளின் பின்புலம் - சமுதாய அந்தஸ்து - பெரும் எண்ணிக்கையுள்ள தோழர்களின் பலம் என எதுவுமே இல்லாத - மிக எளிய, மிகக்குறைந்த தோழர்கள் இணைந்து ஒரு சிற்றிதழை ஓராண்டு நடத்துவது என்பது மிகப்பெரும் சாதனை. அந்தச் சாதனைக்கு அடிப்படை - பெரியாரைச் சரியாகக் கொண்டுசெல்வோம் என்ற உங்களது நம்பிக்கை. அந்த நம்பிக்கையைக் காப்பாற்றுவோம். அனைவருக்கும் நன்றி. வெல்லட்டும்! பெரியாரின் பண்பாட்டுப் புரட்சி!




தோழருக்கு,

காட்டாறு இதழ் பார்த்து மகிழ்ந்தேன்.

மிக நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒரு அருமையான பகுத்தறிவு மணம் பரப்பும் இதழைக் கண்டு மனமகிழ்வு கொண்டேன். தோழர் இராவணன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு திண்டுக்கல்லிலிருந்து வெளிவரும் காட்டாறு இதழ் மிக அருமை.

பகுத்தறிவு இதழ்கள் எண்ணிக்கையில் குறைவாக உள்ள ஒரு நிலையில் இந்த இதழ் ஒரு மாறுதலை உருவாக்கும் என்பதில் அய்யமில்லை.

தோழர்களின் முயற்சி வெற்றி தரும் என்று கருதுகிறேன். நான் இரு இதழ்களை மட்டுமே பார்த்தேன். இந்துதுவா சக்திகள் பெருகிவரும் நிலையில் இவ்விதழ் ஒரு தவிர்க்க முடியாத வரவு. இதைக் குறிப்பாக மாணவர்களிடம் கொண்டு செல்லும் வழிவகைகள் குறித்து ஆய்வு செய்ய வேண்டிய தேவை உள்ளது. ஆதித்தமிழர் பேரவை உரிய ஒத்துழைப்பு நல்கும்.

தோழர் விஜயராகவன் அவர்கள் இந்த இதழில் பொறுப்பு வகிக்கிறார். அவருக்கும் மற்ற அனைத்து தோழர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்.



**இரா. அதியமான்**
நிறுவனர், ஆதித்தமிழர் பேரவை.



## வே.ஆனைமுத்து

மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமை இயக்கம்

'காட்டாறு' திங்கள் இதழ் முதலாமாண்டு நிறைவு - இரண்டாமாண்டுத் தொடக்க விழா மலர் பற்றி நீங்கள் விடுத்த மடல் 3.10.15 அன்று கிடைத்தது. மிகவும் மகிழ்ச்சி. மாற்று இதழாகக் 'காட்டாறு' தொடர்ந்து எங்களுக்கு வருகிறது.

'காட்டாறு' பெரியாரின் கொள்கைகளை வென்றெடுத்திடத் தகுதி வாய்ந்த ஒரு புதிய படைக்கலன் என்பது ஒரு பேருண்மை.

1950 வரையில் இதுபோன்ற எண்ணற்ற இதழ்கள் வெளிவந்தன. மீண்டும் அந்தப் பழைய நிலைமை வரவேண்டும் என்பதைப் பெரியாரின் கொள்கை எதிரிகள் நமக்கு நன்கு உணர்த்துகிறார்கள்.

வடிவமைப்பிலும், உள்ளடக்கத்திலும், அச்சாக்கத்திலும் 'காட்டாறு' மிகவும் செழுமையாக உள்ளது. 'காட்டாறு' தொடர்ந்து பணியாற்றிட வேண்டும் என மா.பெ.பொ.க. சார்பில் என் மனமார்ந்த விழைவை உரித்தாக்குகிறேன்.

தோழமையுள்ள,

வே.ஆனைமுத்து

5.10.15.

**'தழல்' தா.பெ.அ.தேன்மொழி,**
ஆசிரியர், 'தழல்' குமுகத் திங்களிதழ். புதுச்சேரி.

# விடுதலையுடன் பறக்க வைக்கும் பகுத்தறிவு இதழ்

'ஆறு' என்ற சொல்லின் பொருள் 'வழி' என்பதாகும். 'வரலாறு' என்பது இதுவரை நடந்த, நடந்து கொண்டிருக்கும் வழிமுறை செய்திகள் என்று கூறலாம்.

இவ்வாறே இயல்பாகச் செல்லும் நீர் வழியை 'ஆறு' என்றும், காட்டின் வழியே பாயும் நீரைக் 'காட்டாறு' என்றும் கூறலாம். காட்டாறு என்பது காட்டில் உள்ள மரம், செடி, கொடிகளையும் அழித்துக் கொண்டு பாயும் தன்மை கொண்டது. அவ்வாறே அறிவியல் பண்பாட்டு இதழான 'காட்டாறு' என்ற பெயருடைய இந்தத் தன்மதிப்பு (சுயமரியாதை) இதழ், இந்தக் குமுகம் வேரோடி மிக வளமுடன், பல நச்சு ஆளுமையரால் தீண்டாமை என்னும் நச்சுநீர் ஊற்றி சாதி - மத ஆழமான, அகன்ற முள்மரங்களை வளர்த்துக் கொண்டுள்ள நிலையில், பகுத்தறிவுப் பகலவன் தந்தைப் பெரியார் நமக்களித்த தன்னறிவு, தன்மானம் என்ற கூரிய வாளால் வெட்டி வீழ்த்தவும், சந்து பொந்துகள் அனைத்திலும் கண்ணிற்குத் தெரியாமல் வளர்ந்துள்ள நச்சு நுண்ணுயிரிகளான, அறியாமை, பெண்ணடிமை, மூட நம்பிக்கை அனைத்தையும் தேடி அழிக்கவும் மிக விரைந்து வளர்ந்து பகுத்தறிவு நோக்குடைய அனைவர் கைகளுக்குப் பாய்ந்தும், மேலும் துமுக்கியாகவும் கிடைத்தவாறுள்ள நிலை பெரும் நம்பிக்கையை உருவாக்கியுள்ளது.



ஒவ்வொரு பக்கமும் மிக ஆழமான செய்திகளை தந்தைப் பெரியாரின் கருத்தியலோடு வெளிப்படுத்தும் அழகும், துணிவும் கொண்ட இவ்விதழ் இந்தக் குமுக சிக்கல்களை அடியோடு தீர்த்து அழுந்திக் கிடக்கும் அடிப்படை மக்களை நிமிர வைத்து, அழுகிப் போய்க் கொண்டுள்ள மாந்த நேயத்தை மீட்டெடுக்கும் உயர் இதழான 'காட்டாறு' எங்கும் பாய்ந்து செல்ல வேண்டும் என்று தழல் விரும்புகிறது.

ஆரியப் பண்பாட்டு அழிப்புப் போரில் 'காட்டாறு' தொடங்கி 12 இதழ்களிலும் பல அறிவு அறிவியல் தாக்கங்களையும், சாதி - மத கட்டுகளுக்கு எதிரான விடுதலை வெளிகளையும் இந்து ஏமாளி மக்களுக்கு 'காட்டாறு' ஏற்படுத்தியுள்ளது என்றால் அது மிகையன்று. பல இக்கட்டுகளில் சிக்கிய அனைவரையும் விடுதலையுடன் பறக்க வைக்கும் இந்த பகுத்தறிவு இதழ் என்னையும் நம்பிக்கை வெளியில் பறக்க வைத்தது.

இந்த இதழின் சிறப்பாக்கங்களைக் குறிக்க வேண்டுமானால் ஒவ்வொன்றைப் பற்றியும் பல பக்கங்கள் எழுத வேண்டிவரும். சுருக்கமாக, மிக ஆழச் செய்திகள், அரசூர் அ.ப.சிவாவின் 'தன்மதிப்பு (சுயமரியாதை) வாழ்வே நல்(சுக) வாழ்வு' என்ற தொடர் கட்டுரை, மருத்துவர் பெரியார் செல்வியின் அறிவியல் நுணுக்கங்களையுடைய உணவியல் செய்திகள், தந்தைப் பெரியார் உரைகளின் வழி நம் வினாக்களுக்கான விடைகள் இவையனைத்தும் பெருந்தெளிவை இந்த குமுக மக்களிடையே கட்டாயம் உருவாக்கியிருக்கும்; உருவாக்கும்.

அவ்வாறே, மாட்டின் கழிவுகளும் மருந்தாகும் விந்தையை அறிஞர்.யாழ்மொழி தம் அரிய மொழிபெயர்ப்பின் மூலம் உலகுக்கு- நம் தமிழர்களுக்கு விளக்குவதும், பசுவும், பார்ப்பனரும்: அன்றும் இன்றுமான தெளிவுறுத்தும் கட்டுரை, இந்தியாவின் பெருந்தொழில் (கார்பரேட்) ஆளுமைக்குழு சாதிகளால் தடுக்கப்பட்டுள்ளதா? என்ற அதிய கட்டுரை,

பெரியார் பிறந்த நாளில் பெருமைமிக்க இறப்பு ஆவணப்பதிவு, காதலுக்கு காவலானவூர் காவலாண்டியூர் ஈசுவரனின் துணிவுமிகு போராட்டங்களை நேர்கண்ட யாழ்மொழி விசயகுமார் அவர்களின் அக்கறைத்துணிவு, முனைவர் பூ.மணிமாறனின் குழந்தை நடுவக் கல்வி பற்றிய விளக்கம், பூப்பு நீராட்டு விழா பற்றிய அறிவியல் சார்ந்த அரிய விளக்கம், காதலைப் புரிந்து கொள்வோம் தொடரில் மாந்தஉடலில் நிகழும் வேதியல் நிகழ்வுகள் பற்றிய பூங்குழலியின் அரிய விளக்கம்,

ஆர்.எஸ்.எஸ் இன் அணுகுமுறை - அமைப்பு முறையைக் கதைபோன்று விளக்கும் யாழ்மொழியின் விளக்கம், இராசராசன் தமிழனே அல்ல! துணிவுமிகு வரலாற்றுச் சான்றுடன் விளக்கம், காதலர் நாளைக் கொண்டாடுவோம் விடுதலைக் காதலை மதிப்போம் என்ற காதலைச் சிறப்பிக்கும் அரிய கட்டுரைகள், உலகவயமாகிறது ஓக மோசடி என்ற ஓகத்திற்கு அடிகொடுக்கும் யாழ்மொழியின் மொழிபெயர்ப்பு,

உத்திரப் பிரதேச அதிகார நடுவங்களின் பார்ப்பன ஆளுமை பிராபாகர் அழகர்சாமியின் மொழிபெயர்ப்பு, குண்டூசியின் குத்தும் நறுக்குகள், சிந்திப்பதற்கான அரிய குளிகைகளாகக் கட்டச் செய்திகள், அதி அசுரன் எழுதிய பார்ப்பனப் பண்பாட்டுப் படையெடுப்பில் ஈழம், மீனாமயில் எழுதிய ஆதிக்கத்தை நேசிக்கும் அடிமைச் சமூகம் அருமையான துணிவான தெளிவுறுத்தும் கட்டுரைகள், சல்லிக்கட்டு, தாலி இந்து - தமிழர்களின் பண்பாடல்ல, இளைஞர்கள், பெண்கள் அறிந்து தெளிவுற அரிய செய்திகள்,

பாலியல் கல்வி பருவமடைதல் கருவுறுதல், அண்மையில் நடந்த பேராசிரியர் கல்பர்கியின் படுகொலை பற்றிய பகுத்தறிவாளர்களின் படுகொலையும் - எதிர்வினையும் போன்ற அரிய காட்டாறு முகப்புரைகள் - கட்டுரைகளைத் தாங்கி வரும் காட்டாற்றை போன்ற அரிய அருஞ்செய்திகள் எவரும் தடுத்திடவோ, மறுத்திடவோ இயலாது; 'காட்டாறு' இவ்வுலகத்தின் சிக்கல்களையும் நேர்மையற்ற தீச்செய்திகளையும் பகுத்தறிவற்ற படுகொலைகளையும் முழுமையாக அழிக்கும்வரை காலங்காலமாய் ஓடி கருவறுக்கும் என்று,

நம்பிக்கையுடன்,
'தழல்' தா.பெ.அ.தேன்மொழி, புதுச்சேரி

# காட்டாறு ஒரு கூட்டாஞ்சோறு!

## தோழர் த.லெனின்
மாநிலக்குழு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி



**காட்டாறு என்பது திடீரென கரை புரண்டோடும் தன்மையது கரைகளை உடைக்கும் ஆற்றல் படைத்தது இங்கோ காட்டாறு கரைதழும்பி ஒடி நாளும் அறியாமை மூட நம்பிக்கை களால் நிரப்பபட்ட கரைகளை காணாமல் செய்வதோடு, அரித்து,அரித்து அறிவுக்கடல் நோக்கி நம்மை அழைத்துச் செல்வதாய் அமைகிறது.**

காட்டாறு இதழ்களை படித்தோர் இதழ்கள் புன்னகை பூக்காது. மாறாக இறுக்கமடையும், புருவம் உயர்த்தும் ஒரு வேதி மாற்றத்தை விதைக்கும் தன்மை கொண்டதாகும் மானுடம் தழைத்திட மாபங்காற்றிய விளாதிமிர் லெனின் ‘ஒரு பத்திரிகை என்பது நல்ல பிரச்சாரகாரக மட்டும் இருக்கக்கூடாது அது சிறந்த அமைப்பாளனாகவும், போராடக்கூடியதாகவும் இருக்கவேண்டும் என்றார்’, இந்த வகையில்தான் காட்டாறு ஏங்கிய, சிந்தனை வறண்ட நிலங்களுக்கு நீர் பாய்ச்சி புதிய சிந்தனை பயிர்களை வளர்த்திடும் வகையில் அமைந்துள்ளது.

மத்தியில் மதவெறி, வகுப்புவாத சக்திகள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு நமது கல்வித்துறையை கவ்வி பிடித்து, வரலாற்று ஆய்வுமையத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து வரலாறு திரிக்கப்படுவதும், தங்களது சதிகார ஆதிக்க உயர்சாதி ஆணவ அரசியலுக்கு ஏற்ற தகவமைப்புகளை உருவாக்கி, உண்மைகளை உருக்குளைக்கும் வேலைகளை தொடர்ந்து செய்துவருகிறது.

நமது விடுதலைப்போராட்ட மதச்சார்பற்ற தன்மைகளை மூடிமறைக்க மூர்க்கமாக முயல்கிறது. 1920களில் சுவாமி ஷரதானந் அவர்களை அழைத்து டெல்லி ஜும்மா மசூதில் முஸ்ஸீம்கள் வைத்ததையும், முசுலிமான கிச்சுலுவை அழைத்து சீக்கியர்களின் அமிர்தரஸ் பொற்கோயிலில் போதனைகள் செய்யவைத்ததும் 1921 ல் எந்த ஒரு முசுலிமும் பிரிட்டிஷ் இந்திய ராணுவத்தில் பணியாற்றக்கூடாது என அ.இ.கிலாபத் கமிட்டி அலி சகோதரர்களின் முன்முயற்சியால் தீர்மானம் இயற்றியதும் அதனால் அலிசகோதர் மீது ராஜதுரோக குற்றம்சாட்டி வெள்ளை அரசு கைது செய்ததும் நடந்தது. தேசப்பிதா காந்திஜி இத்தீர்மானத்தை நூற்றுக்கணக்கான கூட்டங்கலில் மீண்டும் மீண்டும் நிறைவேற்ற வேண்டுகொள்விட்டதும் வரலாறு! ஆனால் சங்கபரிவார ஆரவாரமாக பிரிட்டிஷ் இந்திய வெள்ளை அரசை ஆதரித்தவர்கள். எனவே தான் காந்தியை கொன்ற கோட்சேவுக்கு கோயில் கட்ட முழக்கமிடுகிறனர். நாடு முழுவதும் சிலை வைக்கப் போகிறார்களாம்! இதனை எதிர்த்து உ.பி.ல் நவ்நிர்மான் சேனா என்கிற அமைப்பு 40 கிராம மக்களை திரட்டி கூட்டம் நடத்திய முயற்சியை செய்தியாக செயல்பாட்டுள்ளது ஒரு நம்பிக்கை வெளிச்சம்!

மாட்டிறைச்சி தடை போடப்பட்ட இக்காலத்தில்தான் மாட்டிறைச்சி எவ்வளவு சத்து நிறைந்தது இளைஞர்களுக்கான எல்லாச் சத்துக்களும் கொண்ட உணவு என்பதை சொல்வதோடு மாட்டிறைச்சி உண்ணும் குட்டி நாடுகள் கூட கெட்டிக்காரத் தனத்தோடு, ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வாங்குவதையும் இவ்வளவு பெரியமக்கள் தொகை கொண்ட நம் நாடு ‘முட்டையை’ வாங்கியதையும் பகடையாக முடிந்திருப்பது சிறப்பு.

குஜராத் அரசு பாடப்புத்தகங்களில் அறிவுக்கு உதவாத பல செய்திகளை திணிப்பதை படம்பிடிக்கிறது இந்த இதழ் இன்றைய விமானங்கள் அன்றே பயன்படுத்தப்பட்டன (மகாபாரத்தில்) கார்கள் கூட இருந்தன, உறுப்புமாற்று அறுவை சிகிச்சை அன்றே இருந்தது அதன்மூலம்தான் பிள்ளையார்ருக்கு ஆனைமுகம் பொறுத்தப்பட்டதாக பிரதமர், அமைச்சர்கள் பேசவும் செய்கின்ற வெட்கக் கேட்டை என்ன சொல்ல?

வரலாற்றுத்துறையில் இடதுசாரிகள் ஊடுருவி விட்டார்கள் எனக்குறைபட்டுக் கொண்டு முழுக்க முழுக்க சாதியை, புராணங்களை, மூடத்தனங்களை நியாயப்படுத்தும் வகுப்புவாதியின் தலைமை ஏற்றுவிட்டார்கள். வரலாறு அற்றவர்கள் தங்களுக்கான வரலாற்றை உருவாக்க இன்று முயற்ச்சிக்கின்றனர். அறிவியல் பகுப்புத்தன்மையில் அறிந்து துணிந்து உண்மையைக் கூறினால் அவர்கள் இடது சாரிகள் என கூறப்படுகின்றனர், உண்மையில் அது வரவேற்கதக்கதே. தேசப்பிதா காந்தி ‘நமது பள்ளிகள், கல்லூரிகளின் வரலாற்றுப்புத்தகங்களில் வரலாற்றை மிகவும் மோசமாகத் திரித்துக்கற்பிக்கப்படுவது நீடிக்கும் வரை இந்தியாவில் மதநல்லிணக்கம் நிரந்தரமாக ஏற்பட வாய்ப்பில்லை’ என்று குறிப்பிட்டதை எண்ணவேண்டியது அவசியம்.

ஜாதி ஒழிப்பு குறித்த பெரியாரின் பேச்சு அதில் இடைச்சாதிக்குள் நடக்கும் காதல் திருமணங்களை பெருமைபடுத்துவதைவிட தலித் - பிறசாதி திருமணங்களை வலியுறுத்தியதை இப்போது மீள்வாசிப்புக்கு கொண்டுவந்தது சரியானசெயல் ஆகும். ஏன் என்றால் இன்று காதல் நாடகம்

குறித்து அரசியலில் வாக்குப் பெறுவதற்கான அரசியல் அசிங்க நாடகம் நடக்கும் காலம், வீரவிளையாட்டாகப் பார்க்கப்படும் ஜல்லிக்கட்டில் மல்லுக்கட்டும் ஜாதிவெறி குறித்து ஒரு கட்டுரை பேசுகிறது. அதில் தலித் அடக்கிய பிறசாதி காளைகளை மட்டும் கொலை செய்யபடுவதில்லை. அடக்கிய தலித்துகளையே கொன்றுவிடுவார்கள் எனகூறியிருப்பது நமது தமிழ் சமூகத்தில் நிலவும் சாதியப் பகை உணர்வைச் சிறப்பாக வெளிப்படுகிறது.

இட ஒதுக்கீடு குறித்து சிலகட்டுரைகள் பேசுகிறது இடது ஒதுக்கீடு வறுமை ஒழிப்புத்திட்டமோ அல்லது வேலைவாய்ப்புத்திட்டமோ அல்ல. ஆனால் இடஒதுக்கீட்டில் வறுமை ஒழிப்புத்திட்டமும் காலம்காலமாக வேலை, கல்வி, மறுக்கப்பட்டவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கபடுவதும் சேர்ந்ததே ஆகும், ஆனால் உலகமயச் சூழலில் பெறும் தாக்குதலுக்கு உள்ளாகியிருப்பது இந்த இட ஒதுக்கீடு எனும் சமூக நீதிக்கொள்கை ஆகும்.

உணவு, உடை, இசை, மொழி, என எல்லாவற்றிலும் ஒரு ஆதிக்கச் சுரண்டல் பண்பாட்டை உருவாக்குவது தான் உலகமயம். பொதுத்துறைகளை அழித்து தனியார் மயமாக்குவது உண்மையில் சமூக நீதியை அழிப்பதுதான். உலகமயமாக்கலின் பொருளாதார சமூகக்கொள்கைகளை முற்றாக எதிர்பது தான் சமூகநீதிக்கு போராடுவது ஆகும். இதில் சமூக நீதி இயக்கங்கள் முனைப்புக்காட்டாமல் இறுப்பது சரியல்ல. இந்தியாவில் உலகமயம் அமல் படுத்தப்பட்ட இந்த 20ஆண்டுகளில் முதலில் பாதிப்புக்கு உள்ளானவர்கள் மலைவாழ்பழங்குடிகள், தலித்துகள், இதரபிறப்படுத்தப் பட்டவர்கள் தான். மலைவாழ்பழங்குடிகளில் 90 சதவிதம் தலித்துகளில் 80 சதவிதம் பிற்படுத்தப்பட்டவர்களில் 75 சதவிதம் ஏழைகள் என்பதிலிருந்தே உலகமயத்தின் சமூகக் கோரமுகம்தெரியும். எனவேதான், கல்வி சுகாதாரம் சமூகநலதிட்டங்கள் தொடர்ந்து சூறையாடப்படுகின்றன. பொருளியல் குறித்த தொடர் கட்டுரைகள் இவ்விதழில் வெளியிடப்படவேண்டிய தேவை எழுந்துள்ளது.

குழந்தைகளுக்கான சிறப்பான செய்திகள் அறிவியல் கருத்துகள், சுயமரியாதை உணர்வை எழுப்பும் செய்திகள், சிந்தனைச்சிற்பி சிங்காரவேலரின் குடிஅரசுக்கட்டுரைகளை மீண்டும் பிரசுரிப்பதும் இன்று தேவையானதாகும். மொத்தத்தில் சாதியற்ற, பாலின பேதமற்ற, அறிவியல் எண்ணம் கொண்ட தமிழ்ச்சமூகம் படைக்க, இடதுசாரிகள் - முற்போக்களர்கள் - ஜனநாயகம் - மதசார்பற்றவர்களின் கருத்துகள் என கூட்டாஞ்சோறைச் சமைப்பதைப்போல ஒர் இனைப்பை உருவாக்கவேண்டும் உயர்சாதிகளைச் சார்ந்த பகுத்தறிவாளர்கள் மகாராஸ்ட்டிரத்தைச் சார்ந்த தபோல்கர், கோவிந்த பன்சாரே கர்நாடகப் பேராசிரியர் கல்புர்கி ஆகியோர் மதவெறியர்களால் சங்கபரிவாத வகுப்புவாத அமைப்புகளால் தொடர்ந்து படுகொலை செய்யப்படும் பாசிச பயங்கரவாதச் செயல்களை இதழ் அழுத்தமாகப் பேசுகிறது. இது தொடரவேண்டும்.

## சிற்பி அர.செல்வராசு, D.C.E., B.E.,

மண்டலத் தலைவர்,
அனைத்து பொறியாளர் சங்கங்களின் கூட்டமைப்பு.
துணைப் பொதுச் செயலாளர்,
திராவிட இயக்கத் தமிழர் பேரவை.

பேரன்புடையீர் வணக்கம்.

இப்பவும் தங்களின் வெளியீடுகளைப் படிக்கின்ற வாய்ப்பை நண்பர் பல்லடம் விஜயன் மற்றும் தோழர் அ.ப.சிவா ஆகியோர் மூலம் கிடைக்கப் பெற்றேன்.

ஒவ்வொரு செய்தியும் பொருள் பொதிந்ததாக இருக்கிறது. எல்லா வகையிலும் அறிவார்ந்த செய்திகள். ஈழத்தின் செய்திகளாக இருந்தாலும், பண்பாட்டுச் செய்திகளாக இருந்தாலும் ஆழமாகக் கருத்துகள் சொல்லப்பட்டுள்ளது. கிடைத்தற்கரிய செய்திகள் எல்லாம் சிறப்பாகத் தொகுக்கப்பட்டு வெளியிட்டு வருவது சிறப்பு.

விமர்சனக் கருத்துக்கள் என்று பார்த்தால் இந்த இதழ் பகுத்தறிவுப் பாதையில் திராவிட இயக்கக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு செயல்பட்டு வரும் அறிவார்ந்த தோழர்களுக்கு புரியும்படி உள்ளது என்பதை மறுக்க முடியாது. எனது கருத்து, புதிதாக நமது திராவிட இயக்கங்களின் மீது ஈர்ப்புக்கொண்டு உள்ளே வர விரும்பும் இளைஞர்கள் மற்றும் மகளிர் போன்றோருக்கும் போலியான தமிழ்த்தேசியத்தின் மீது ஈர்ப்புக் கொண்டோருக்கும் புரியும் வகையில் செய்திகள் எளிமைப்படுத்தப்பட்டு வழங்கினால் சிறப்புற இருக்கும் என்று கருதுகிறேன்.

காட்டாறு என்று பெயர் வைத்து கட்டுப்பாட்டுடன் இதழ் நடத்தும் தங்கள் பாங்கினைப் பாராட்டும் வேளையில் கூடுதலாக இதழ், இளைஞர்கள் மற்றும் மகளிர் என்று புதிய தலைமுறைத் தோழர்களுக்கும் பயன் பெறும் வகையில் இருந்தால் மென்மேலும் சிறப்படையும் தங்கள் பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

வாழ்க பகுத்தறிவு! வெல்க பெரியார் கொள்கை !!

# காட்டாறு பன்னிரண்டு கற்பவர்க்குக் கற்கண்டு

**கவிஞர் தமிழேந்தி**
பொதுச்செயலாளர்,
புரட்சிக்கவிஞர் கலை இலக்கிய மன்றம்,
அரக்கோணம்.



காட்டாறு என்பது மலைப்பகுதிகளில் பெய்யும் திடீர் மழையால் பெருக்கெடுத்து வரும் வெள்ளமாகும். பெரிய பெரிய மரங்களையும், கற்குன்றுகளையும் பெயர்த்தெடுத்துவரும் பேராற்றல் கொண்டது. அதுபோலவே இச்சமூகத்தில் பன்னெடுங்கலமாக நிலைத்துப் போன பழமை எண்ணங்களையும் மூடப்பழக்க வழக்கங்களையும் அடித்து நொறுக்கவல்ல ஆற்றல்வாய்ந்த அறிவாயுதமாய்க் காட்டாறு தோற்றங்கண்டுள்ளது. காட்டாறு சமவெளிகளில் பாய்கிறபோது எல்லாக் கசடுகளையும் நிரவிச் சமப்படுத்துவது போலவே சமூகச் சமுத்துவம் நோக்கியதாகவும் இந்த ஏடு மலர்ந்துள்ளது எல்லையற்ற மகிழச்சி தருகிறது. இதுவரை வெளிவந்துள்ள பன்னிரண்டு இதழ்கள் குறித்தும் சுருக்கமாக என் கருத்துகளைப் பதிவு செய்ய விழைகிறேன்.

**காட்டாறு : 1 அக்டோபர் 2014**

முதல் இதழிலேயே 'தற்காலச் சூழலில் பெரியாரியலை நடைமுறைப் படுத்த, அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டக் காட்டாறு வருகிறது. அறிவியல் பண்பாட்டை திராவிடர் பண்பாட்டை அறிவிக்க விரும்புவோர் எழுதுங்கள், அறிய விரும்புவோர் படியுங்கள், வளர்க்க விரும்புவோர் ஆதரவளியுங்கள்' என ஏடு வெளிவருவதன் நோக்கம் பற்றிய தெளிவான கொள்கை பதிவாகியுள்ளது.

'சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு' எனற் தலைப்பில் தோழர் அரசூர் அ.ப.சிவா அவர்கள் இதழ்தோறும் தொடர்ந்து எழுதும் கட்டுரை பெரியாரியலை நடைமுறை வாழ்வோடு பொருத்திக் காட்டும் சிறந்த படைப்பாகும்.

'மருந்தாகும் மாட்டின் கழிவுகள் மனித குலத்திற்கு ஒரு அவமானம்' சீனிவாஸ் கக்கிலியா கட்டுரையை, யாழ்மொழி தமிழாக்கம் செய்துள்ளார். தோழர் யாழ்மொழி குறித்துச் சொல்லியாக வேண்டும். பெரியாரியல் குடும்பத்தில் தோன்றியுள்ள அறிவார்ந்த நன்முத்து அவர். அவரின் கல்வித்தகுதி, பணிநிலை குறித்த செய்தியும் இவ்வேட்டில் இடம் பெற்றுள்ளது. பாழ்பட்டுக் கிடக்கும் இவ்வினத்தை நிமிர்த்திட, நிறைய நிறைய யாழ்மொழிகள் தேவை.

'மதக்கட்டுப்பாடுகளுக்கு எதிரான விடுதலைவெளி' என்ற தலைப்பில் கன்னல் எழுதியுள்ள கட்டுரையும் கருத்துப்பெட்டகம். 'பசுவும் பார்ப்பனரும் அன்றும் இன்றும்' என்னும் தோழர் மே.கா.கிட்டு கட்டுரையும் ஆய்வு நோக்கில் தீட்டப்பட்டுள்ளது. 'யஜுர்' போன்ற தேவங்களில் இருந்தெல்லாம் மேற்கோள் காட்டிப் பார்ப்பனப் புரட்டுகளைத் தோலுரிக்கிறார்.

'இந்தியாவில் கார்ப்ரேட் நிர்வாகம் சாதிகளால் தடுக்கப்பட்டுள்ளதா?' நு ஞு று ஆங்கில ஏட்டில் வெளிவந்த இக்கட்டுரையை பூங்குழலி, யாழ்மொழி இருவரும் சிறப்பாக மொழியாக்கம் செய்துள்ளனர். இட ஒதுக்கீட்டிற்கு எதிரான குரல் ஓங்கி ஒலித்துவரும் இக்காலச் சூழலில் இதனைக் குறுவெளியீடாகவே கொண்டுவரலாம். 'இந்தியப் பெருந்தொழில் நிறுவனங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்களில் 65 விழுக்காட்டினர் ஒரே சாதி வகையைச் சார்ந்தவர்கள்' என்கிற குறிப்பு அதிர்ச்சியை அளிக்கிறது.

நிறைவாக அதிஅசுரன் எழுதியுள்ள 'திராவிடர் உடைகள்' பற்றிய கட்டுரையைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். 'காட்டாறு' இதழில் தொடர்ந்து எழுதும் எழுத்தாளர்களில் தோழர் அதி அசுரன் படைப்புகள் எல்லாமே மிக அருமையானவை. இந்தக் கட்டுரையும் அத்தன்மையதுதான். குறிப்பாகப் 'பட்டு' அணிவதைப் பற்றி நம் தோழர்களும் கூட ஆழ்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும். பார்ப்பனியச் சடங்க மறுத்த பல சுயமரியாதைத் திருமணங்களில் கூடப் 'பட்டு' மினுக்குவது கண்களை உறுத்துகிறது. தோளில் துண்டு அணியக்கூடப் போராடிய நம் இயக்கத்தின் வரலாற்றை மிகச் சிறப்பாக இதில் பதிவு செய்துள்ளார்.

**காட்டாறு : 2 நவம்பர் 2014**

இதில் 'காட்டாற்றின் உள்நோக்கம்' எனும் தலையங்கப் பகுதி சிறப்பானது. பெரியார் காலத்திற்குப் பிறகு திராவிடர் இயக்கச் சிற்றிதழ்கள் படிப்படியாக அழிந்தே போய்விட்டன. திராவிடர் அமைப்புகள் தங்களது தலைமைக் கழகங்கள் சார்பில் நடத்தும் 10 க்கும் குறைவான ஏடுகளைத் தவிர, அமைப்புகளின் நிலைப்பாடு களையும் கட்டுப்பாடுகளையும் தாண்டி, சுதந்திரமான விவாதங்களை முன்னெடுக்கும் திராவிடர் கருத்தியல் கொண்ட சிற்றிதழ்கள் எதுவும் தற்போது இல்லை. பெரியார் காலத்திற்குப் பிறகு, அப்படி ஒரு முயற்சியை ஏன் யாரும் எடுக்கவில்லை? முயற்சி எடுக்காதன் உள்நோக்கம் என்ன? அந்த உள்நோக்கத்தை உடைப்பது ஒன்றேதான் காட்டாற்றின் உள்நோக்கம்' என்று கட்டுடைத்துள்ளது சிறப்பு.

'காட்டாறு' எழுத்தாளர்களில் முதன்மையாய்ப் பங்களிப்புச் செய்யும் தோழர்களில் முனைவர் பூ.மணிமாறனும் ஒருவர். அவரின் 'குழந்தைமையக் கல்வி' என்னும் அரிய படைப்பு இதில் இடம் பெற்றுள்ளது.

டாக்டர் பெரியார் செல்வி அவர்களின் 'உணவே மருந்து' கட்டுரை அனைவரும் படிக்க வேண்டிய ஒன்று. பெரியவர் முதல் சிறியவர்வரை காலை, பகல், இரவு வேளைகளில் உண்ண வேண்டியன பற்றிக் 'கலோரி' அளவுடன் பட்டியல் இடுகிறார். 'சாதம்' 'தயிர்சாதம்' என்பதை அவர் மாற்றிக் கொள்ள வேண்டும். 'சோறு' என்ற சொல் இருக்கத் தர்ப்பைப்புல் பார்ப்பனரின் 'சாதம்' ஏன்?

தோழர்கள் யாழ்மொழி விசயகுமார் நேர்காணலில் இடம் பெற்றுள்ள 'காதலுக்கு.. காவலாண்டியூர்' கள ஆய்வுக் கட்டுரை இன்றைய சாதி, தீண்டாமைக் கொடுமைகளைத் தோலுரித்துக் காட்டுகிறது.

வடமாநிலங்களில் அசுர வேகத்தில் பரவும் அசுரகுலத் தலைவர்களின் விழாக்கள்: 'இராவண மேளா' 'மகிசாசுரி வீரவணக்க விழா' யாழ்மொழியின் தமிழாக்கக் கட்டுரை, வடக்குக்கும் தெற்குக்கும் பாலம் அமைத்து நம் உணர்வுகளை முறுக்கேற்றும் உயரிய படைப்பு ஆகும்.

'அரபிக் கடலோரம் முத்தப் புயல் நாடெங்கும் அன்பு மழை' அதி அசுரன் கட்டுரை பழமைவாதிகளைப் பதம் பார்க்கிறது.

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்

எனப் பாட்டன் வள்ளுவனே முத்தத்திற்குப் பச்சைக் கொடி காட்டிவிட்ட பிறகு ஏனடா இந்தக் கலாச்சாரக் கூப்பாடு? என அறிவு பொருத்திய வினாவை எழுப்பியுள்ளது அருமை. திராவிட விவசாயத் தொழிற்சங்கத்தின் பழம்பெரும் பேராளித் தோழர் நாகை எஸ்.எஸ்.பாட்சாவின் நேர்காணல் கருத்தில் நிறைந்த காலப் பெட்டகம்.

**காட்டாறு : 3 திசம்பர் 2014**

இவ்வேடு பெரியாரியல் பெரும்பேராசிரியர் எம்.எஸ்.எஸ்.பாண்டியன் அவர்களின் நினைவுச் சிறப்பிதழாக அமைந்துள்ளது. பாண்டியன் அவர்களின் சில அரிய படைப்புகள் அல்லாமல், பாண்டியன் பற்றித் தோழர் விடுதலை.க.இராஜேந்திரன், இட்ரீஸ்காந்த் போன்றோரின் ஈரநினைவுகளும் இதயத்தைப் பிழிகின்றன. 'காவிமயமாகும் இந்தியா .. ஓர் எச்சரிக்கை' இளந்தோழர் யாழ்மொழியின் கட்டுரை மிக மிக ஆழமான கட்டுரை. எல்லோரும் படிக்க வேண்டிய அரிய படைப்பு.

தோழர் கணியூர் தமிழ்ச்செல்வனின் 'முத்தப் புரட்சி தொடரும் போராட்டங்கள்', 'பூப்புனித நீராட்டு விழா பண்பாட்டின் அடையாளமா? நம் குழந்தைகளின் பாதுபாப்பிற்கு அச்சுறுத்தலா?' 'குழந்தைகளை மதிப்போம்' போன்ற தலைப்புகளில் இவ்விதழில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளும் சமூகப் பொறுப்பு மிக்கவையாய் உள்ளன.

**காட்டாறு: 4 சனவரி 2015**

'திராவிடர் இயக்கக் கூட்டமைப்பு உருவாகட்டும்' என்கிற பயனுள்ள ஆசிரியவுரையைத் தாங்கியுள்ள இந்த ஏட்டில் ' கோட்சேவிற்குக் கோயில் கட்ட எதிர்ப்பு', 'பள்ளிப் பாடத்தில் பகவத் கீதை', 'நாப்கின் அனுப்பும் போராட்டம்' எனப் படிக்க வேண்டிய பல செய்திகள் உள்ளன. 'காதலைப் புரிந்து கொள்வோம்' என்கிறார் பூங்குழலி. 'ஜல்லிக்கட்டு' பற்றி அலசுகிறார் அதி அசுரன். 'பாசக் கீரைகளைப்' பட்டியலிடுகிறார் முத்துக்குமார்.

'ஆர்.எஸ்.எஸ் அமைப்பு முறையும் அணுகுமுறையும்' பற்றி எழுதும் யாழ்மொழி சங்கப் பரிவார் அமைப்பினர் நமக்கு எதிரானவர்கள்தாம் எனினும் அவர்களின் அணுகுமுறையிலிருந்து நாம் அறிய வேண்டியவை பல உள்ளன என்கிறார்.

டாக்டர் பெரியார் செல்வி 'கல்யாண சமையல் சாதம்' போடுகிறார். அக்கட்டுரையில் இன்று வழக்கில் இருக்கும் பல திருமண உணவு வகைகளைப் பற்றிச் சொல்லி, அவற்றில் சுவைவேண்டிச் சேர்க்கப்படும் பொருள்களில் உள்ள ஆபத்தகளைக் குறிப்பிடுவது நல்ல எச்சரிக்கை.

'பெரியாரும் கல்வியும்' என்ற தோழர் கோ.தமிழ்ச்செல்வனின் கட்டுரை, கட்டாயம் படிக்க வேண்டிய ஒன்று. "தங்கள் தங்கள் குழந்தைகளுக்கு நகை செய்து போடுவதற்குப் பதிலாகக் கல்வி செய்து வையுங்கள்" என்றும் பெரியாரின் கூற்றுதான் என்ன?

அதி அசுரன் தன் 'ஜல்லிக்கட்டு' கட்டுரையில் 'கலித்தொகை' உள்ளிட்ட சங்க இலக்கியங்களில் இருந்தவற்றை மேற்கோள் காட்டுவதுடன்' மாட்டின் கொம்புகளை விடப் பார்ப்பானின் உச்சிக் குடுமி மயிர்களுக்குப் பலம் அதிகாமாக இருக்கும் காலம் இது. மாடுபிடிக்கப் போராடுவதை விட்டுவிட்டுக் கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு கிடைக்கப் போராடுங்கள். எதிர்காலத் தமிழன் ஏற்றமுடன் வாழ்வான்' என்பது அருமை.

**காட்டாறு: 5 பிப்ரவரி 2015**

இராசேந்திர சோழனையும் அவன் எழுப்பிய தஞ்சைப் பெரிய கோயிலையும் அட்டைப்படமாகத் தாங்கி வந்துள்ள இவ்விதழில் 'அன்று மனுதர்மம்; இன்று தமிழ்த்தேசியம்' என்னும் அதி அசுரனின் அரிய கட்டுரை இடம் பெற்றுள்ளது. மனுவின் முறையில் பிறப்பின் அடிப்படையில் சுத்தமாய்க் குருதி ஆய்வு செய்து பார்த்தாலும் இங்கு யாரும் தமிழன் இல்லை; திராவிடனும் இல்லை என்று ஓங்கிச் சொல்லும் தோழர் அசுரன், இராசராசனைத் தூக்கி வைத்துக் கொண்டாடும் நவீனத் தமிழ்த்தேசியர்களுக்குச் சரியான சாட்டைஅடி கொடுக்கிறார்.

கால்டுவெல்லின் பங்களிப்பைக் காய்தல் உவத்தல் இன்றி எடையிடும் அ.மார்க்ச் கட்டுரை அந்தப் பேரறிஞருக்கு செலுத்தப்பட்ட புகழ்க்காணிக்கையாகும். 'காதலைப் புரிந்து கொள்வோம்' என்னும் பூங்குழலியின் கட்டுரை இந்த இதழிலும் தொடர்கிறது. 'தகுதி திறமை கூட்டுபாடுகளுக்குப் பதிலடி' என்னும் கட்டுரை " 13 மில்லியனிலிருந்து 14 மில்லியன் பணியாளர்கள் தொழில்புரியும் மிகப்பெரும் பொதுத்துறை நிறுவனமான இந்திய இரயில்வேயில் இடஒதுக்கீட்டால் தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோர் - பழங்குடியினர் வகுப்புத் தொழிலாளர்களால் உற்பத்தித்திறன் (ஞசடினரஉவளைவல ) குறையவில்லை; மாறாகச் சில துறைகளில் அதிகரித்துள்ளது" என அமெரிக்கப் பேராசிரியர் இருவரின் ஆய்வு முடிவுகளை முன்வைத்துள்ளது அருமை. யாழ்மொழி இக்கட்டுரையை அளித்துள்ளார்.

சுதந்திரக் காதலைப் புரிந்து கொள்வோம் என்கிறார் பள்ளிப் பாளையம் இரமேசு. மேலும் மனுநீதி, கம்பராமாயணம், பெரிய புராணங்களைக் கொளுத்துவோம்' என்னும் அறிஞர் அண்ணாவின் 'திராவிட நாடு' இதழின் கட்டுரை ஆசிரியவுரை பகுதியில் இடம்பெற்றுள்ளது சிறப்பு.

**காட்டாறு : 6 மார்ச்சு 2015**

'உனக்கு முருகன் என்றால் எனக்குப் புத்தன்' என்னும் தலைப்பைத் தாங்கி நிற்கும் ஆசிரியவுரை, இன்றைய நவீனத் தமிழ்த்தேசியர்களின் முருகப் பக்தியைத் தோலுரிக்கிறது. 'பச்சை உடுத்தி முருகன் முன் காவடியையும் வேலையும் தூக்கிக் கொண்டு நின்றாலும் நாம் தேவடியாள் மக்கள்தாம். சட்டப்படியும், சாத்திரப்படியும் உள்ள இந்த இழிவை அழிப்பது அல்லது அழிக்க முயல்வதுதான் பண்பாட்டுப்புரட்சி' என அறைகூவல் விடுகிறது இக்கட்டுரை.

குழந்தை வளர்ப்பில் பெற்றோர் பங்கு பற்றிப் பேசுகிறார், தோழர் மணிமாறன். ஆய்வுகளின் அடிப்படையில் வந்த ஓர் ஆங்கில ஏட்டின் கருத்தான 'குழந்தைகளை மதமற்றவர்களாக வளர்ப்பதே சிறந்தது' என்பதைத் தமிழ்ப்படுத்தித் தந்துள்ளார் யாழ்மொழி.

'அன்று மனுதர்மம் இன்று தமிழ்தேசியம்' அதிஅசுரன் கட்டுரையின் 2 ஆம் பகுதி, 'முஸ்லீம்களும், கிருஸ்துவர்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், தங்களை ஆரியர் என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர் அல்லாத மற்ற இந்துக்கள் என்று செல்லிக் கொள்ளுகிறவர்களும் ஆகிய எல்லோரும் திராவிடர்கள் என்ற தலைப்பின்கீழ் வருவார்கள்' என்ற பெரியாரின் மேற்கோளைப் பொறுத்தமாய்க் கையாண்டுள்ளது மிகச்சிப்பாய் உள்ளது.

கருந்திணை ஒன்றுகூடல் நல்ல பதிவு. காட்டாற்றில் எப்போதாவது சிலநேரங்களில்தான் கவிதைகள் இடம் பெறுகின்றன. இந்த இதழில் வெளிவந்துள்ள 'கோவிலும் கருவறையும்' என்கிற கமலக்கண்ணன் கவிதை மிகமிக அருமை. 'காதலர் நாளில் பா.ஜ.க.அலுவலகத்திற்குப் பெண் கேட்டல் போராட்டம்' மிக நல்ல பதிவு.

**காட்டாறு : 7 ஏப்பிரல் 2015**

'புதியவர்களை எழுத வைப்போம்; அந்த எழுத்துகளால் புதியவர்களை அமைப்பாக்குவோம்' எனும் அறைகூவலைக் கொண்டுள்ளது இந்த ஏடு. 'முதல் இதழ் 500 தான் அச்சிட்டோம்; இரண்டுநாள்களில் அத தீர்ந்துவிட்டது. உடனே அதேமுதல் இதழை மீண்டும் 500 அச்சிட்டோம். அதுவும் தீர்ந்தது. 7ஆவது இதழ்வரை 1000 இதழ்களாக அச்சிடுகிறோம். அனைத்து விற்பனை ஆகிவிடுகிறது என்கிற மகிழ்ச்சியான செய்தியும் இதில் பதிவாகியுள்ளது.

'தாலி இந்துப் பண்பாடும் அல்ல; தமிழர் பண்பாடும் அல்ல' என்கிற ஆழமான கட்டுரை பல்வே அய்யங்களுக்கு விடை அளிப்பதாய் விளங்குகிறது. காதலுக்குப் புது இலக்கணம் தரும் பள்ளிப்பாளையம் இரமேசின் படைப்பும் அருமை.

'மாட்டிறைச்சியில் உள்ள அவசியமான சத்துக்கள்' பற்றி அறிவியல் கண்ணோட்டத்தோடு விளக்கம் அளித்துள்ளார் டாக்டர் பெரியார் செல்வி. உத்திரப் பிரதேச அதிகார மையங்களில் பார்ப்பன ஆதிக்கம் பற்றிய ஆங்கில இதழ்க்கட்டுரையை அழகுத் தமிழில் தந்துள்ளார் பிரபாகரன் அழகர்சாமி.

'முகநூல் விவாதங்கள்' வழக்கறிஞர் அ.அருள்மொழி உள்ளிட்டோரின் பயனுள்ள விவாதங்களாக நீள்கிறது. 'தாலி இந்துப் பண்பாடும் அல்ல; தமிழர் பண்பாடும் அல்ல' என இந்த இதழிலும் அலசுகிறார் தோழர் அதி அசுரன்.

'அழியும் பேருயிர்கள்; யானைகள்' என்கிற கட்டுரை பயனுள்ள படைப்பு. 'இராமானுசர்' வரலாற்றுப் பொய்மையும் இந்த இந்த இதழில் வெளிப்படுத்தப் பட்டுள்ளது கூடுதல் சிறப்பாகும்.

**காட்டாறு : 8 மே 2015**

'உலகமயாமாகிறது யோகா' அட்டைப்படம் அருமை. தோழர் அதி அசுரனின் 'நிலக்கொள்ளை மீண்டும் பார்ப்பனர் பொற்காலம்' கட்டுரை அருமை. எந்தச் செய்தியையும் வரலாற்றுக் கண் கொண்டு ஆயும் தோழர் அசுரனின் படைப்புகள் தனித்தன்மை வாய்ந்தவை.

'கேள்விகளுக்கு அப்பாற்பட்ட புனிதமா திருமணம்?' எனக் கேள்வி எழுப்புகிறார் அழகர் சாமி. 'அக்கிரகார எரிப்புப் போராட்டம்'என்னும் தோழர் மடத்துக்குளம் மோகனின் 'நினைவின் நிழர்கள்' பழைய சுயமரியாதை இயக்க வரலாற்றை அசை போட வைக்கிறது.

இளைய தோழர் திராவிடன் நேர்காணல் நம் புலர்காலைப் பொழுபளுக்குப் புதுரத்தம் பாய்ச்சுகிறது. அறிவார்ந்த மகனைத் தந்த பெற்றோருக்கு நமது பாராட்டுதல்கள். தோழர் திராவிடன் பல்துறை ஆற்றலில் மின்னுகிறார். தமிழ்வழிக் கல்வி குறித்த கேள்வியில் மட்டும் தடுமாறுகிறார். காட்டாறு இதழ்க்குழுவிற்கே இதில் கறாரான பார்வை இல்லை. தோழர் து.ஆ திராவிடன் தன் முன்னெழுத்துகளைத் தமிழாக்கிக் கொள்ள வேண்டும்.

'குஷ்பு கோவிலும் கண்ணகி சிலையும் ஒன்றுதான்' என்கிற கருத்தில் எனக்கு மாறுபாடு உண்டு. ஏற்கனவே காட்டாறு இதழிலும் என் கருத்தைப் பதிவு செய்துள்ளேன். 'விடியாத பொழுதுகள்' பள்ளிபாளையம் இரமேசுவின் கவிதை மிக அருமை. அவரை நிறைய எழுத வைக்கலாம்.

**காட்டாறு : 9 சூன் 2015**

'பெரியார் எழுத்தும் பேச்சும் அடுத்த தலைமுறைக்கு அறிவாயுதம்' என்கிற ஆசிரியவுரை அரிய பல தகவல்களைச் சொல்கிறது. அடுத்த கட்டத்திற்குப் பெரியாரின் படைப்புகளைக் கொண்டு செல்வதற்குத் தேவையான கடும்பங்களிப்பைக் கவலையோடும், அக்கறையோடும் எடுத்துப் பேசுகிறது. இதற்குரிய முழுமையான ஆற்றலும், முடுபாடும், கணினி தொடர்பான கட்டமைப்பு வசதிகளும் காட்டாறு இதழுக்கு இருப்பதாகவே கருதுகிறேன். தன்னலங் கருதாமல் இப்பெரு நோக்கத்திற்குப் பெரியார் தொண்டர்கள், அம்பேத்கர் நெறியினர், முற்போக்குத் தோழர்கள் பலரும் முன்வந்து உதவிட வேண்டும் என்றும் வேண்டுகிறேன்.

'காட்டாறு திட்ட இலக்கைத் தாண்டியது' என்கிற நம்பிக்கையான செய்தியும் நமக்கு மகிழ்ச்சி தருகிறது. இந்த இதழில் 'நமக்குத் தேவையா யோகா?' என்கிற மருத்துவர் சீனிவாசன் சுக்கிலயா கட்டுரை யோகாமீது கொண்டுள்ள வீண் புனைவுகளைப் பொய்யாக்குகிறது.

'காமமும் ஆண் ஆதிக்கமும்' 'தமிழகத்தின் ஒரு நூற்றாண்டு காலப் போராட்டக்களங்கள்' போன்ற கட்டுரைகளும் படிக்க வேண்டிய படைப்புகள். மணிமாறனின்

'இலவசக் கட்டாயக் கல்லிச்சட்டம் 2009, அதன் நிறை குறைகளை' அலசுகிறது. 'பறைச்சி எல்லாம் ரவிக்கை போட்டுக் கொண்டார்கள்'- பெரியாரின் கட்டுரை கடந்துபோன இன்றும் நடந்து கொண்டுள்ள பல வரலாற்று உண்மைகளைப் பேசுகிறது. பலரும் இக்கட்டுரையை ஊன்றிப் பயில வேண்டும். மடத்துக்குளம் மோகன் நினைவலைகள் இவ்வேட்டிலும் பதிந்துள்ளன.

**காட்டாறு: 10 சூலை 2015**

'தீண்டாமை வன்கொடுமை போராட்டங்களின் இலக்கு சரியானதா?' என்பது குறித்து இவ்விதழ் பேசுகிறது. 'காட்டாறு'வின் பார்வை எப்போதும் கருத்துநிறைந்த பார்வையே. 'நாம் என்ன படிக்க வேண்டும் என்பதைக் கார்பரேட் கம்பெனிகள் தீர்மானிக்கும்' கொடுமை பற்றிப் பேசும் தோழர் வீ. பிரபாகரன் கட்டுரை அருமை.

'குழந்தை ஒன்றுக்கு மதுவைத் திணித்த காட்சியைக் காட்டிப் பெரிதுபடுத்தின காட்சி ஊடகங்கள். அதே குழந்தையின் மீது மதத்தைத் திணிப்பதும், சாதியைத் திணிப்பதும் சரிதானா? என்கிற அறிவார்ந்த கேள்வியைக் காட்டாறு எழுப்பியுள்ளது.

'பார்ப்பனப் பண்பாட்டுப் படையெடுப்பில் ஈழம்' என்ற கட்டுரையில் தோழல் அதி அசுரன் தன்னின் தனித்தன்மைவாய்ந்த அரிய பல கருத்துகளைப் பதிவு செய்துள்ளார். வெற்று வீரம் பேசியே இங்குள்ள தமிழர் அழிகின்றனர் என்பது வராற்கு அவலம். 'கல்வி ஒடுக்கப்பட்டோருக்கான விடுதலை' என்பதைப் பூ.மணிமாறன் தன் படைப்பில் உறுதிசெய்கிறார். 'நெசமாத்தான் சொல்றேன்' குண்டூசியின் கவிதை கவனத்தை ஈர்க்கிறது.

**காட்டாறு: 11 ஆகஸ்டு 2015**

'காட்டாறு டிஜிடல் பாய்ச்சல்' ஆசிரியவுரை அருமை. நம்பிக்கையோடு அடிவைத்தால் எந்தச் செயலிலும் வெற்றி உறுதி.' வினையாண்மை' மிக்க காட்டாறு ஆசிரியர் குழு தடைக்கற்களைத் தூளாக்கி முன்னேறும் என்பதில் எள்ளளவும் அய்யமில்லை.

கடந்த இதழில் 'பாலியல் கல்வி ஓர் அறிமுகம்' என்ற கட்டுரை இடம் பெற்றது. இந்த இதழிலும், செப்டம்பர் இதழிலும் அது தொடர்வதைக் கண்ணுற்றேன். காட்டாறு அறிவியல் பண்பாட்டு இதழாக மலர்வது மகிழ்ச்சிதான். ஆனால் பாலியல் கல்வி, பெரும்பாலும் மருத்துவச் செய்திகளை உள்ளடக்கியதாய் உள்ளது. மேலும் அது அதிக பக்கங்களையும் எடுத்துக் கொள்கிறது. இதுகுறித்து ஆசிரியர் குழு எண்ணிப் பார்க்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

'சுற்றுச்சூழல் அழிவும் இந்து மதமும்' என்ற கட்டுரை முத்தாய்ப்பு. பெருங்கேடுகளுக்கு நடுவில் உண்மையில் இஃது பெருங்கவலை கொள்ளக் கூடிய செய்தியே. கட்டுரை நன்று. மது ஏள மனு, முனைவர் பூ.மணிமாறனின்' அறிவின் வழி உரையாடல், வரலாற்றுப் பதிவுகள், எல்லாம் தேவையான பதிவுகளே.

'மொழி பக்தர்களே' என்ற பெரியர் கட்டுரைக்கு என் விரிவான கருத்தை 'காட்டாறு' இதழுக்கு அனுப்பியுள்ளேன். பெரியாரின் மொழிக் கொள்கையில் நான் மாறுபடுகிறேன். ஒடுக்கப்பட்ட மக்கள் ஓரளவாவது கல்வியில் கடைதேற வேண்டுமென்றால் கட்டாயம் அது தாய்மொழிக் கல்வியால்தான் வாய்க்கும். இஃது விரிவாக விவாதிக்கப்பட வேண்டிய தளம்.

'மதுவிலக்கு பைத்தியக்காரத்தனம்' என்ற கருத்திலும் நான் வேறுபடுகிறேன். முற்றிலுமாய் மதுவை ஒழிக்க முடியாது என்பது உண்மையே. ஆயின் மதுவால் சீரழிந்து கிடக்கும் நம் செந்தமிழ்நாட்டு மக்களை ஓரளவேனும் நாம் காப்பாற்ற வேண்டாமா?

**காட்டாறு: 12 செப்டம்பர் 2015**

அய்யாவின் அட்டைப்படமும் 'சுதந்திரத் தமிழ்நாடு என்பது இலட்சியம்' விடுதலை 95ஆம் பிறந்த நாள் மலர்க் கட்டுரையும் அழகுக்கு அழகு சேர்க்கின்றன. 'பகுத்தறிவாளர்களின் படுகொலையும் எதிர்வினையும்' என்பது சரியான நேரத்தில் எழுதப்பட்டுள்ள தலையங்கமாகும். வரலாற்றில் தோன்றிய அறிவாளர்களையெல்லாம் வகைப்படுத்திப் பட்டியலிட்டுள்ள பாங்கு அருமை.

'பெரியாரும் பாவ்லோ பிரையரும்', 'நிகழ்காலச் சூழலும் சாதிய வன்கொடுமைகளும்', 'கல்பாத்தி முதல் சேஷசமுத்திரம்வரை' போன்ற கட்டுரைகள் இன்றைய நடப்பு அரசியலுக்கு உகந்த செய்திகளைப் பேசுகின்றன. 'மனித உடலமைப்பும் உளவியலும்', உலகக் கணித மேதை ஆர்க்கிமிடீஸ்' போன்ற கட்டுரைகள் முழுக்க மருத்துவ, அறிவியல் செய்திகளை உள்ளடக்கியுள்ளன.

'தாத்தாவின் இறுதி ஊர்வலம்' எனும் குண்டூசியின் சிறுகதை அளவாய் இருந்தது. ஆயினும் சிறுகதைகளும், இதழுக்கு ஒரு கவிதையும் இடம்பெறச் செய்தல் நலம் என எண்ணுகிறேன். இதழின் பின் அட்டை இடப்பங்கீட்டுப் புள்ளி விவரங்களைக் கொண்டுள்ளது பயனுள்ள தகவல். இதுவரை வெளிவந்துள்ள காட்டாறு 12 இதழ்கள் குறித்து மேலும் விரிவாய் எழுதக்கூடும். கட்டுரை நீண்டுவிட்டால் அஃது படிப்பவரை சோர்வுபடுத்தும் என்பதால் நிறுத்திக்கொண்டோம்.

இதழ்களில் காக்கா முட்டை, ஓ காதல் கண்மணி, 36 வயதினிலே, வாசுவும் சரவணனும் ஒண்ணாப் படிச்சவங்க, பாபநாசம் போன்ற தமிழ்ப்படங்கள் அல்லாமல் ஹைதர் (ழுயவைாயச) போன்ற பிறமொழிப் படங்களும் திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டுளளன. திறனாய்வு நம் பார்வையிலும் கூர்மையாகவும் அமைந்துள்ளது பாராட்டுக்குரியது. அறிவுமதி போன்ற அறிமுகமான பாவலர் பாடல்கள் மட்டுமின்றிப் பல புதியவர்களின் பாக்களும் இதழுக்கு அணி சேர்க்கின்றன. புதிய இளைஞர்களின் படைப்புகளைத் தொடர்ந்து ஊக்கப் படுத்துங்கள்.

'வரலாறு' என்கிற தலைப்பிலான பெட்டிச் செய்திகளைத் தொடர்ந்து அதிக அளவில் வெளியிடுங்கள். 11.05.1927 அன்று வடார்க்காடு மாவட்டம், வாணியம்பாடியில் தலித்துகளுக்கு ஓர் அய்யங்கார் கர்ணத்தால் நேர்ந்த அவலம் பற்றிப் படித்தபோது நெஞ்சு கொதித்தது. கருந்திணை நிகழ்வுகளைப் பதிவு செய்வது மற்றவர்களுக்கு ஊக்கம் தரும் செயலாகும். இன்னும் எழுதலாம். இப்போதைக்கு இவை போதும்.

# கேள்வியாக மட்டுமின்றி, விடையாகவும் அமையட்டும் காட்டாற்றின் பயணம்

கோவி.லெனின்
இதழியலாளர், சென்னை



கரை அடங்கி நடக்கும் ஆறுதான் வயல்வெளிகளில் பயிர் விளைவிக்க உதவும். கட்டுப்பாடில்லாமல் பாயும் வெள்ளம் நிலத்தை பாழ்படுத்திவிடும். எனினும், விளைநிலங்களைக் குப்பைக்கூளங்கள் ஆக்கிரமித்திருக்கும்போது அவற்றை அடித்துத் துவைத்து இழுத்துச் செல்ல, காட்டாறு அவசியமாகிறது. இந்த இதழும் அப்படித்தான்.

பெரியாரை தேசவிரோதி என்று சித்தரிக்கும் மதவாதக் கும்பல் ஒருபுறம், அவரைத் தமிழின விரோதி என்று விமர்சிக்கும் புது பாசிஸ்ட் குழுக்கள் இன்னொரு பக்கம் என இருமுனைத் தாக்குதலை அவர் மீது நடத்திவரும் காலகட்டத்தில் காட்டாற்றின் வேகம், அந்தக் குப்பையான விமர்சனங்களை அடித்து துவைத்து இழுத்துச் செல்வதை இதழ்கள்தோறும் காண முடிகிறது.

தந்தை பெரியாரின் பிறந்த செப்டம்பர் மாதத்தில் வெளியாகியிருக்கும் காட்டாறு இதழில், இந்தியாவில் பகுத்தறிவுக் கருத்துகளை வெளிப்படுத்துபவர்களின் உயிர்கள் பறிக்கப்படும் இன்றைய சூழலில், அதுகுறித்த ஆழமான பார்வையுடன் கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு வசதிகள் பெருகியுள்ள இன்றைய நிலையில் இந்தியாவிலும் பங்களாதேஷிலும் அந்தந்த நாடுகளின் பெரும்பான்மை மதத்தைச் சேர்ந்த வெறியர்கள் கருத்துச்சுதந்திரத்தின் கழுத்தை அறுத்துக் கொண்டிருக்கும் நிலையில், இந்தளவு பாதுகாப்பு ஏதுமற்ற காலத்தில் நாத்திக - பகுத்தறிவுக் கருத்துகளை துணிச்சலுடன் பேசியும் எழுதியும் சமுதாயத்தில் புரட்சிகரமான மாற்றத்தை உருவாக்கிய பெரியாரின் பெரும்பணியின் தாக்கத்தை உணரமுடிகிறது.

இந்தக் கண்ணோட்டத்தில்தான் இன்றைய சூழலில் பெரியாரின் தேவை எந்தளவு உள்ளது, அவருடைய கருத்துகள் சமுதாயத்தின் பல தளங்களிலும் எப்படிப் பொருந்துகின்றன என்பதை அறிவியல் கண்ணோட்டத்துடன் அணுகக்கூடியதாக காட்டாறு இதழ் அமைந்துள்ளது.

மனித உடலை போகப்பொருளாக, குறிப்பாக பெண்கள் உடல் மீதான கவர்ச்சிப் பார்வையாக நோக்கும் சமுதாயத்தில் அதனை அறிவியல் கண்கொண்டு விளக்குவதும், சேஷசமுத்திரங்களில் நிலவும் சாதி ஆதிக்கத்தின் ஆணிவேரைக் கண்டறியும் ஆய்வுப்பார்வையுடன் வெளியிடுவதும் காலத்தின் தேவைக்கேற்ற கட்டுரைகளாக உள்ளன.

புதிய தொழில்நுட்ப வசதிகளையும் கவனத்தில்கொண்டு அதற்கேற்ற வடிவமைப்புகளில் செய்திகளைக் கொண்டு செல்லும் பணியும் பாராட்டுக்குரியது. பகுத்தறிவுவாதிகள் கொலை பற்றிய செய்தியின் இறுதியில், நாம் எத்தனை முற்போக்கு கலைஞர்களை, படைப்பாளிகளை உருவாக்கியிருக்கிறோம் என அமைப்புகளை நோக்கி எழுப்பியிருக்கும் கேள்வி மிக முக்கியமானது. இனியேனும் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் உருவாக்குவது ஒன்றே அந்தக் கேள்விக்கான விடையாகும். கேள்வியாக மட்டுமின்றி, விடையாகவும் அமையட்டும் காட்டாற்றின் பயணம்.

வாலாசா வல்லவன்
திராவிடர் இயக்க எழுத்தாளர்
தமிழ்க்குடிஅரசு பதிப்பகம்

# மதுவிலக்கு

## சாணக்கியன் கூறியதையே நாமும் கூறுவது எப்படி சரி?

திராவிடர் இயக்க வரலாற்றில் பல இதழ்கள் புரட்சிகரமான கருத்துக்களை விதைத்து தமிழகத்தில் ஒரு பண்பாட்டு புரட்சியையும், நாம் இந்தியர்கள் அல்ல திராவிடர்கள் ( தமிழர்கள் ) என்ற உணர்வையும் நம்மிடையே ஏற்படுத்தி வந்திருக்கின்றன. அந்த வகையில் பெரியாரியலை ஏற்றுக்கொண்ட தோழர்கள் ஒரு குழுவாக இணைந்து 'காட்டாறு' என்கின்ற புரட்சிகரமான கருத்துகளை தாங்கிவரும் ஒரு இதழைத் தொடங்கி, அதை வெற்றிகரமாக ஒரு ஆண்டு முழுவதும் (12 இதழ்கள்) சிறப்பான முறையில் வெளியிட்டு, அதனையொட்டி ஒரு ஆண்டு மலரையும் ( விமர்சன இதழாக ) வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

காட்டாறு இதழில் வெளிவரும் கட்டுரைகள் இதழின் தலைப்புக் கேற்ப காட்டாறாகவே பாய்ந்தோடுகின்றன. நல்ல மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் பல வெளிவந்திருக்கின்றன. முதல் இதழிலேயே 'மருந்தாகும் மாட்டின் கழிவுகள் மனித குலத்திற்கு ஒரு அவமானம்' என்ற கட்டுரை மிகச் சிறப்பாக உள்ளது.

சிந்துவெளி நாகரீக காலத்தில் வழ்ந்த திராவிட மக்கள் எருதை வழிபட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் ஆய்ந்து கூறியுள்ளனர். ஏனெனில் அவர்கள் வேளாண்மைத் தொழிலை சிறப்பாகச் செய்து வந்தனர். வேளாண்மைக்கு உதவி செய்த காளை மாடுகளை போற்றினர்.

கால்நடைகளை மேய்த்துக் கொண்டு நாடோடிகளாகத் திரிந்து வந்த ஆரியர்களுக்கு மாடுகளின் இன விருத்திக்காகப் பசுவைப் புனிதமாகக் கருதினர். அவர்களுக்கு உணவாகவும் அவை இருந்தது. ஆரியர்கள் தங்களுடைய யாகங்களில் பசுவைச் சுட்டுத்தின்றதை 'ரிக் வேதகால ஆரியர்கள்' என்ற நூலில் ராகுல சாங்கிருத்தியாயன் சான்றுகளுடன் குறிப்பிட்டுள்ளார்.

பசுவிலிருந்து கிடைக்கும் பொருட்களுக்கு பஞ்சகவ்வியம் ( சாணம், மூத்திரம், பால், நெய், தயிர்) என்று பெயரிட்டு அதை தீட்டு நீக்குவற்காக என்று கூறி திதி, திவசம் போன்ற நாட்களில் சூத்திரர்களுக்கு கொடுத்து அவமானப்படுத்தி வந்தனர், வருகின்றனர். சுயமரியாதை இயக்கம் தோன்றி வளர்ந்த பிறகு இது அம்பலப் படுத்தப்பட்டது. பஞ்சகவ்வியத்தின் மோசடி குறித்து அம்பேத்கரும் எழுதி உள்ளார். தற்போது பெருநகரங்களில் பசுவின் எண்ணிக்கை குறைந்து விட்டதால் மாட்டு மூத்திரம் பாட்டில்களில் அடைத்து நாட்டு மருத்து கடைகளில் விற்பனை செய்யப் படுகிறது.

யாழ்மொழி அவர்களின் கணினி செயல் திறமையும், பெரியாரியலுக்கு அவரது பங்களிப்பையும் குறித்து எழுதியிருந்ததைப் படிக்கும் போது மிகவும் மகிழ்வாக இருந்தது.

திராவிடர் உடைகள் அதிஅசுரன் கட்டுரையில் பட்டுப்புடவை பெண்கள் அணிவதைப் பற்றி சிறப்பாக எழுதியுள்ளார். தந்தை பெரியார் அவர்கள் ஆடம்பரமான துணிகளையும், நகைகளையும் அணிவதற்கு ஆசைப்பட்டு பெண்கள் ஆண்களுக்கு அடிமைகளாக உள்ளனர். என்று கூறி உள்ளார். உடை அணிவதில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடு இருக்கக்கூடாது என்று கூறியிருப்பார். அதே கருத்தை அதிஅசுரன் கூறியுள்ளது பாராட்டுக்குறியது. பெரியாரின் மேற்கோள்களை சுட்டிக்காட்டியிருக்கலாம்.

2014 டிசம்பர் இதழ் எம்.எஸ்.எஸ்.பாண்டியன் சிறப்பிதழாக வெளியிட்டிருப்பது சிறப்பு. எம்.எஸ்.எஸ்.பாண்டியனின் 'தமிழ்நாட்டில் இந்துமத அரசியல் சக்திகள் காலூன்ற முடியவில்லை ஏன்?' என்ற கட்டுரையில் 1967ல் அண்ணா முதலமைச்சர் ஆனவுடன் 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி'க்கு அளித்த பேட்டியில் 'மதம் இல்லாமல் மனிதன் வாழமுடியாது' என்று கூறியுள்ளதை மறைத்துள்ளார். அண்ணா சொன்னதை அப்படியே சொல்லியிருக்கலாம். மறைக்கவேண்டிய அவசியமில்லை. அண்ணாவின் பேட்டி வெளிவந்த இதழ் பெயரையும் வெளியிடாமல் ஒரு வார இதழுக்கு அளித்த பேட்டி என்றும் எம்.எஸ்.எஸ்.பாண்டியன் தனது கட்டுரையில் எழுதியுள்ளார். திராவிடர் இயக்கத்தைப் பொருத்தவரையில் ஒளிவு மறைவு இல்லாமல் இருக்க வேண்டும் என்பதுதான் முக்கியம்.

சனவரி 2015 இதழில் அதிஅசுரனின் ஜல்லிக்கட்டு பற்றிய கட்டுரை சிறப்பாக உள்ளது. யாழ்மொழியின் அர்.எஸ்.எஸ் பற்றிய கட்டுரையும் அருமை. ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தின் செயல்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கு தேவையானதாகும்.

பிப்.2015 இதழில் ‘அன்று மனுதர்மம் இன்று தமிழ் தேசியம்’ அதிஅசுரனின் கட்டுரை மிக அருமை. தமிழ்த் தேசியவாதிகளின் முகத்திரையைக் கிழிகிழி என்று கிழித்துள்ளார். பெ.மணியரசனுக்கு உரைக்கும்படி இராஜராஜ சோழனே சுத்த தமிழன் அல்ல என்று கூறி சவுக்கடி கொடுத்துள்ளார்.

மார்ச் 2015 இதழிலும் அதிஅசுரனின் ‘அன்று மனுதர்மம் இன்று தமிழ்தேசியம்’ இரண்டாம் பகுதி மிக அருமை. பெரியாரின் மேற்கோள்களோடு பொருத்திக் காட்டியுள்ளார். ஏப்ரல் 2015 இதழில் ‘காட்டாறு’ இதழ் தொடங்கப்பட்ட விதம் குறித்தும், இதழின் வளர்ச்சி குறித்தும் 500 படிகள் அச்சடித்து 1000படிகளாக வளர்ந்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.இது போதாது மேலும் பல ஆயிரகணக்கில் வெளிவரவேண்டும். அதற்கான தேவை உள்ளது.

“என்னை விமர்சிப்பவர்கள் அனைவரும் ஒரே ஜாதிக்காரர்கள்” என்ர வே.மதிமாறனின் குற்றச்சாட்டுக்கு சரியான பதில் அளிக்கப்பட்டுள்ளது. மே2015 இதழில் ‘குஷ்பு கோவிலும் கண்ணகி சிலையும் ஒன்றுதான்’ என்று எழுதுவதற்கு துணிச்சல் வேண்டும். சிலப்பதிகாரத்தில் அதிக அளவு ஆரிய சார்பான கருத்துக்கள் இடம் பெற்றுள்ளது. பார்ப்பனரை வைத்துத் திருமணம், வடமொழி மந்திரம், சடங்குகள், யாகம், தாலி முதலானவை இடம் பெற்றுள்ளன.

டாக்டர் இராசமாணிக்கனார் கருமுத்து தியாகராயர் நடத்திய தமிழ்நாடு இதழில் தாலி பற்றி ஆராய்ச்சி செய்து தொடர் கட்டுரை எழுதிவந்தார்.கி.பி.ஏழாம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் தமிழகத்தில் தாலி கட்டும் பழக்கம் ஏற்பட்டுள்ளது என்பதை பல்வேறு சான்றுகள் காட்டி நிறுவினார். அப்போது மா.பொ.சி தனது செங்கோல் ஏட்டில் இராசமாணிக்கனாருக்கு மறுப்பு எழுதினார். சிலப்பதிகாரத்திலேயே கோவலன் கண்ணகிக்கு தாலி கட்டியுள்ளதைச் சுட்டிக்காட்டி பண்டைக்காலம் முதலே தமிழர்களுக்கு தாலி கட்டும் பழக்கம் இருந்திருக்கிறது என்று வாதாடினார். ஆரியப் பண்பாட்டுக்கான தொடக்க நூலே சிலப்பதிகாரம் தான். அதைத் தமிழ்ப் பண்பாட்டுக்கான நூலாக தமிழ்த்தேசியவாதிகள் பாரட்டுவதுதான் வியப்பாக உள்ளது.

2015 ஆகஸ்ட் இதழ் முதல் ‘பாலியல்கல்வி’ தொடராக வெளிவருகின்றது. இந்த அறிவியல் யுகத்தில் அவ்வளவு விளக்கமாக வெளியிட வேண்டுமா? என்ற வினா எழுகிறது. ஆசிரியர் குழு அதைப்பற்றி சிந்திக்க வேண்டும்.

மதுவைப் பற்றியும் அதன் தேவையைப் பற்றியும், ‘மது விலக்கு’ தேவையில்லை என்ற தொனியில் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. அய்ரோப்பிய நாடுகளில் குளிர் பிரதேசங்களில் உடல் வெப்பநிலையை உயர்த்திக் கொள்வதற்க்காக சற்று மது அருந்துவார்கள். காரல்மார்க்ஸ் கூட அவ்வப்பொழுது ஒரு பெக் மது அருந்துவார். நம் நாட்டில் தயாரிக்கப்படும் மது வகைகள் மிகவும் மட்டமானவை. கரும்பு சக்கைகளில் இருந்து வடிகட்டி எடுத்த எரிசாராயத்தில் கலர்பவுடர் கலந்து விற்பனை செய்கிறார்கள். அரசுக்கு இவ்வளவு இழப்பு என்று அம்பேத்கர் கூறியுள்ளதை எடுத்துக்காட்டியிருக்கத் தேவையில்லை. உழைக்கும் மக்களின் குடும்பங்களுக்கு போய்ச் சேரவேண்டிய பணம் தானே அரசுக்கு போகிறது.இதனால் எத்தனை குடும்பங்கள் பாதிக்கின்றன.

அர்த்தசாஸ்த்திரம் எழுதிய சாணக்கியன் அரசர்கள் நீடித்து அரசாள சில வழி முறகளைக் கூறியுள்ளான் அதில் மிக முதன்மையானது மதுக்கடைகளை தாராளமாக திறந்து விடும்படி கூறியுள்ளான்.மது மூளையின் செயல்வேகத்தை கட்டுப்படுத்துகிறது. ஆட்சியாளர்கள் நிம்மதியாக ஆட்சி செய்ய வேண்டுமென்றால் மதுக்கடைகளை தாராளமாக திறந்துவிட வேண்டும் என்று சாணக்கியன் கூறியதையே நாமும் கூறுவது எப்படி சரி?


பெரியார் சொன்னார் அம்பேத்கார் சொன்னார் என்பதற்காக அதை அப்படியே எடுத்துக்கொள்ள வேண்டுமா? அம்பேத்கார் மத்தியில் எது ஆட்சிமொழியாக இருக்கிறதோ அதுதான் இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று 1948 இல் தார் கமிஷனுக்கு ( மொழி வழி மாநிலம் அமைக்க அரசால் அமைக்கப்பட்ட முதல் குழு ) கோரிக்கை வைத்தார். இன்று மத்தியில் ஆட்சிமொழி இந்தி, அதையே தமிழ்நாட்டிலும், மற்ற மாநிலங்களிலும் ஆட்சி மொழியாக வைக்க வேண்டும் என்பது எப்படி சரி? அம்பேத்கரின் இந்த கருத்தை நாம் புறக்கணிக்கிறோம். பார்ப்பனியத்திற்கு எதிராக இந்து மதத்திற்கு எதிராக அவர் கூறியவற்றை நாம் அதரிக்கிறோம்.

திருவள்ளுவர் காலத்திலேயே தமிழ்மக்கள் குடிகாரர்களாக இருந்த்ததால்தான் ‘கள்ளுன்னாமை’ என்ற அதிகாரத்தையே திருவள்ளுவர் எழுதினார். ஆசிரியர்குழு சிந்திக்க வேண்டுகிறேன்

---

வணக்கம். காட்டாறு இதழில் வெறும் பகுத்தறிவுச் சிந்தனைகளை மட்டும் பகிராமல் கல்வி குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதும், பாராட்டுக்குரியது. மேலும் ஊடகத்தில் காட்டப்படும் எதிர்வினைக் கருத்தையும் விமர்சித்தது அருமை. ஏனெனில் ஊடகம்தான் இன்று மக்களை பலவாறு திசை திருப்புகிறது.

மேலும், ஒரு சமஸ்கிருத மந்திரத்தை அதனின் தமிழ் அர்த்தமுடன் பதிவிட்டால் நன்றாக அமையும் என கருதுகிறேன். நன்றி.



**முகிலன்**

இலயோலா கல்லூரி, சென்னை

# நவீன இலக்கியச் சூழலுக்கும் பெரியாரிய இலக்கிய ஆர்வலர்களுக்கும் தூரம் அதிகம்

**பெரியாரும் அவருடைய சிந்தனைகளும் முன்னெப்போதையும் விடக் கடுமையாகத் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படும் காலம் இது. தூய இனவாதத்தை முன்வைக்கும் தமிழ்த்தேசியர்கள், தலித் அரசியலை முன்வைப்பவர்களில் ஒரு பிரிவினர் ஆகியோர் பெரியாரியத்தின் அடிப்படைகளைத் தகர்ப்பதற்கான எத்தனத்தில் இருக்கிறார்கள்.**

இன்னொருபுறமோ பெரியாரியத்தின் நேரடி எதிரியான இந்துத்துவம் மய்யத்தில் ஆட்சியைப் பிடித்த துணிச்சலில், ஊடகங்களிலும் ஃபேஸ்புக் போன்ற சமூக ஊடங்களிலும் தன் திமிர்த்தனத்தைக் காட்டிவருகிறது. தலித் மக்களுக்கு எதிரான சாதிய ஒருங்கிணைப்போடு இடைநிலை ஆதிக்கச்சாதிச் சங்கங்களும் ஒருபுறம் இந்துத்துவத்தை ஏற்றுக்கொண்டு இன்னொருபுறம் சாதியத் திமிரை முன்வைக்கின்றன. இவர்களுக்கும் பெரியார் முக்கிய எதிரி. இவர்களும் திராவிடம் என்னும் கருத்தாக்கத்துக்கு எதிராகக் குரல் கொடுத்துவருகிறார்கள்.

ஆனால் அதே நேரத்தில் பல ஆண்டுகளாகப் பெரியாரிஸ்ட்களோடு தத்துவ விவாதங்களில், சமயங்களில் தத்துவ மோதல்களில்கூட ஈடுபட்டு வந்த கம்யூனிஸ்ட்கள் (அது மய்யநீரோட்ட கம்யூனிஸ்ட்களான சி.பி.எம். போன்றவர்களாக இருந்தாலும் ம.க.இ.க. போன்ற மார்க்சிய லெனினியக் குழுக்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி) இந்துத்துவத்துக்கும் பார்ப்பனியத்துக்கும் இடைநிலை சாதியத்திமிருக்கும் எதிராகப் பெரியாரைத் தங்கள் கைவாளாக உயர்த்துகின்றனர்.

சி.பி.எம்மின் இளைஞர் அமைப்பான இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் அண்மையில் மாட்டிறைச்சி உண்ணும் விழாவை நடத்தியதோடு 'பார்ப்பன எதிர்ப்பு' என்னும் சொல்லாடலைப் பயன்படுத்தியிருந்தது ஓர் எடுத்துக்காட்டு. இன்னொருபுறம் பெரியாரியக்கங்களுக்கு அப்பால் உள்ள பெண்ணியச் சிந்தனைகளை முன்வைக்கிற பெண்களும் பெரியாரை உயர்த்திப்பிடிக்கின்றனர். இப்படியான இருமை நிலைகளே நாம் வாழும் அரசியல் சூழலாக இருக்கிறது.

இன்னொருபுறம் பெரியாரியத்துக்கான 'தேவை'யும் அதிகரித்திருக்கிறது. மய்யத்தில் ஆட்சிக்கு வந்த இந்துத்துவ அரசு பண்பாட்டுத் திணிப்பை நடத்துவது ஒருபுறம், கௌரவக் கொலைகள் என்ற பெயரில் நடக்கும் சாதி ஆணவக்கொலைகள் இன்னொருபுறம், மணல்குவாரி

**சுகுணாதிவாகர்**
இதழியலாளர்,சென்னை



பிரச்னையில் தமிழகத்தையே அதிரவைத்த 'நரபலி' என்னும் கொடூர மூடநம்பிக்கைகள் என பெரியாரியத்துக்கான 'தேவை' அதிகரித்திருக்கிறது. இப்படியான 'தேவை' அதிகரித்திருக்கிறது என்பது பெருமைக்குரிய விஷயமல்ல.

'இன்னும் சில ஆண்டுகளுக்குப் பிறகு ராமசாமி என்பவன் இதுமாதிரியான விஷயங்களுக்காகப் போராடினானா என்று எதிர்காலத் தலைமுறை சிரிக்க வேண்டும்' என்று கனவு கண்டவர் பெரியார். ஆதிக்கத்தளைகள் அறுபடும் நாளில் பெரியாரின் 'தேவை' இல்லாமல் போகும். ஆனால் அதற்கான 'தேவை'கள் அதிகரித்திருப்பது என்பது சமூகச்சூழல் குறித்து கடுமையான திறனாய்வை முன்வைக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது ஒருபுறம் என்றால், இன்னொருபுறம் பெரியாரியக்கங்கள் மற்றும் பெரியாரிஸ்ட்களின் பணிகள் குறித்த சுயவிமர்சனத்தின் அவசியத்தையும் கோரி நிற்கிறது. அத்தகைய தேவையின் விளைவாகத்தான் 'காட்டாறு' இதழைப் பார்க்கிறேன்.

'காட்டாறு' இதழின் நிர்வாகிகள் திராவிடர் விடுதலைக்கழகத்தைச் சேர்ந்த தோழர்களாக இருந்தாலும் அமைப்பைத் தாண்டிப் பெரியாரியம் என்னும் சித்தாந்தத்துக்கு அழுத்தம் தரும் பணியைக் 'காட்டாறு' மேற்கொள்வது மிகமுக்கியமான விஷயம்.

குறுங்குழுவாதம் என்பது சில ஆண்டுகளுக்கு முன்பு பெரியாரியக்கங்களை ஆக்கிரமித்திருந்த நோய். ஆனால் ஃபேஸ்புக் போன்ற சமூக ஊடகங்களில் பெரியாரிய இளைஞர்கள் தீவிரமாக இயங்கத் தொடங்கியதன்பின் அமைப்புகளைத் தாண்டி பெரியாரைத் தூக்கிப்பிடிக்கும் பணிகளில் ஒற்றுமையுடன் செயல்பட்டார்கள், செயல்படுகிறார்கள். உண்மையில் இந்தப் பணிதான் 'இளந்திராவிடர்கள்' என்னும் அமைப்புகளைத் தாண்டிய குழு உருவாவதற்கும் 'பெரியாரியக்கங்கள் சில புள்ளிகளிலாவது ஒன்றுபட்டு செயலாற்ற முன்வர வேண்டும்' என்னும் கருத்து உருவாகுவதற்கும் அடிப்படை என்று நினைக்கிறேன். இந்த 'இளந்திராவிடர்கள்' அமைப்பையும் 'பெரியாரியக்கங்கள் கூட்டமைப்பாகச் செயல்பட வேண்டியது குறித்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணியின் பேச்சு' ஆகியவற்றை வரவேற்று 'காட்டாறு' முன்மொழிந்திருப்பதும் ஓர் ஆரோக்கியமான நகர்வு.

ஆனால் அதேநேரத்தில் ஒவ்வொரு பெரியாரியக்கமும் தனக்கேயான அரசியல் பண்பைக் கொண்டிருக்கிறது என்பது என் அவதானிப்பு. இதில் சாத்தியமான புள்ளிகளில் ஒன்றிணைந்து செயல்படுவது தேவையாய் இருக்கும் அதே நேரத்தில் பழைய செயல்பாட்டு உத்திகள் எந்தளவுக்குப் பயன்படும், பெரியாரியத்தைப் பல்வேறு தளங்களில் நீட்டிக்கவேண்டிய தேவை, சமகால நவீன அரசியல் சூழல் ஆகியவற்றைக் கணக்கெடுக்கவேண்டிய தேவையும் இருக்கின்றன. அப்படியான பணிகளை அடையாளம் காட்டவேண்டியது 'காட்டாறு' இதழின் முக்கியமான கடமை.

'காட்டாறு' இதழின் மிக முக்கியமான பங்களிப்பாக நான் கருதுவது பண்பாட்டுத் தளத்தில் பெரியாரிய அடிப்படையிலான கருத்துகளை உறுதியாக வைத்து அது தொடர்பான உரையாடல்களை உருவாக்குவது. தோழர். தமிழ்வாணன் 'ஆபாசம்' என்றால் என்ன என்று கேள்வி எழுப்பியதாக இருக்கட்டும், தொடர்ச்சியாகப் பெண்களின் உடலரசியல், பண்பாட்டு விடுதலை தொடர்பான கட்டுரைகளை விட்டுத்தராமல் பிடிவாதத்தோடு வெளியிடும் 'காட்டாறு' இதழ் நன்றியோடு பாராட்டப்பட வேண்டியது. குறிப்பாக இந்துத்துவச் சக்திகளுக்கு எதிராக மாணவர்களாலும் இடது சக்திகளாலும் முன்னெடுக்கப்பட்ட 'அன்பின் முத்தம்' இயக்கத்தின்போதும் ஒட்டுமொத்தத் தமிழக அரசியலே மதுவிலக்குக் காய்ச்சலில் மூழ்கிக்கிடந்தபோதும் 'காட்டாறு' இதழ் சிறப்பான மாற்றுப்பார்வைகளை முன்வைத்தது.

இன்னும் பெரியாரியத் தோழர்கள் பலருக்கே மதுவிலக்கு, ஒழுக்கவாதம், பாலியல் சுதந்திரம் போன்றவற்றில் போதியத் தெளிவு இல்லாதபோது பெரியாரிய அடிப்படையில் உறுதியான பார்வைகளை முன்வைத்தது 'காட்டாறு' இதழின் முக்கியப் பங்களிப்பு. முக்கியமாக மதுவிலக்கு என்னும் வன்முறைக் கருத்தாக்கம் தனிமனித உரிமையை மறுப்பது, எளிய மக்களுக்கான இன்பத்தை மறுக்கும் ஆதிக்கப் போக்கு, மது வியாபாரமோ மதுவிலக்கோ இரண்டுக்கும் பின்னால் உள்ள கார்ப்பரேட் வணிக நோக்கம் மற்றும் அரசியல் நோக்கம் ஆகியவை குறித்து துணிச்சலுடன் எழுதிய இதழ் 'காட்டாறு' மட்டுமே.

தமிழ்த்தேசியவாதிகளின் அவதூறுகளைத் தக்க ஆதாரங்களோடு முறியடிக்கும் கட்டுரைகளை வெளியிடுவது 'காட்டாறு' இதழின் இன்னொரு சிறப்பு. நவீனச் சிந்தனைகளைப் பெரியாரியத்தோடு இணைத்து வளர்த்தெடுக்கவேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அந்தவகையில் பாவ்லோ பிரேயரையும் பெரியாரையும் ஒப்புநோக்கி எழுதிவரும் தோழர் பூ.மணிமாறனின் கட்டுரைகள் முக்கியமானவை. பேச்சு, மேடைப்பேச்சு என்பவை எப்படி ஒற்றைவழி அதிகாரங்களைக் கட்டமைக்கின்றன என்ற கட்டுரை மிகவும் முக்கியமான ஒன்று. மேலும் இதுபோன்ற சிந்தனைகளைப் பெரியாரியத் தோழர்களுக்கு அறிமுகப்படுத்தும் பொறுப்பை இன்னும் 'காட்டாறு' மேற்கொள்ளவேண்டும்.

என்னைப் பொறுத்தவரை 'காட்டாறு' இதழ் குறித்து இரண்டு விமர்சனங்கள்தான் உண்டு. அழகியலோடு கூடிய வடிவமைப்பை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தவேண்டும். இரண்டாவதாக படைப்புகளாக இதழில் வெளியாகும் கவிதை போன்றவை, படைப்புகளாக இல்லை. இது ஏதோ மேட்டிமைப் பார்வையோடு சொல்வதாக எடுத்துக்கொள்ளவேண்டாம். நவீன இலக்கியச் சூழலுக்கும் பெரியாரிய இலக்கிய ஆர்வலர்களுக்கும் தூரம் அதிகம் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

பெரியாரியத் தோழர்கள் மத்தியில் அரசியல் வகுப்புகள், குறும்படப் பயிற்சி வகுப்புகள் என்பவற்றோடு இலக்கிய வகுப்புகளும் நடத்தலாம். அதைக் 'காட்டாறு' இதழேகூட முன்நின்று நடத்தலாம். இலக்கிய அழகியலற்ற படைப்புகளை வெளியிடுவதைவிட வெறுமனே காத்திரமான கட்டுரைகளை வெளியிடுவதில் மட்டும் கவனம் செலுத்தலாம். அல்லது இந்தியா முழுவதும் உள்ள சாதியெதிர்ப்புக் கவிதைகள், தலித்தியக் கவிதைகள், உலகம் முழுக்க உள்ள பெண்ணியக் கவிதைகள், கருப்பர் கவிதைகள் போன்றவற்றை மொழிபெயர்த்து வெளியிடலாம்.



காட்டாற்று வெள்ளத்தின்
மரம், செட்டி, மண், பாறை என
காட்டாறு எனும் மாதஇதழில்
சாதி,மத புரட்டு, மருத்துவம், பாலியல், பொதுஅறிவு
என அனைத்தையும் அடித்து இழுத்துச் சென்று
பகுத்தறிவு எனும் பகுக்கடலை உருவாக்க
தேனீக்கள் போல சிதறிப் பறந்து
குடிஅரசு, விடுதலை மலர்களின் தேனை எடுத்து
காட்டாறு இதழில் இணைக்கும் தொகுப்புக்குழு
தோழர்களுக்கு வாழ்த்துகள்!
தொடரட்டும் உம் மாரி மழையின்
வெள்ளப் பெருக்கு காட்டாறாக
பெருகட்டும் நம் பெரியாரியல் எனும்
பகுத்தறிவுப் பகுக்கடல்.

திரைப்படங்களின் நேர், எதிர் கண்ணோட்ட விமர்சனங்கள் வரவேற்கத்தக்கது. பொது வாழ்வியல் சிந்தனைகளைத் தூண்டும் பாலியல் கல்வி, குழந்தை வளர்ப்பு, கல்வி போன்ற மேலும் பல செய்திகள் அருமை.

முகநூல் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலம் வெளிவருகின்ற, குழந்தைக்கு மதுத்திணிப்பு போன்ற சமூக சீர்கேட்டு பிரச்சினைகள் பற்றி கட்டுரைகள் தொடர வேண்டும்.

காட்டாறு முகநூல் பக்கம் மற்றும் வலைத்தளம் மூலம் மாணாக்கர் மற்றும் இளைஞர்களிடம் எளிதில் கருத்துகளைக் கொண்டு சேர்க்கும்விதமான பணிகளை இன்னும் விரிவு படுத்துதல் வேண்டும்.

**பொறி. அ.கு. பெரியார்செல்வம்**
கோபி, ஈரோடு மாவட்ட மாணவரணி,
திராவிடர் கழகம்.




# இ.ச.திருநாவுக்கரசு

தந்தை பெரியார் படிப்பகம்,
இருகூர், கோவை - 641 103.



**இந்து, சாதிய சனாதன குருட்டு மூட நம்பிக்கைகள் அனைத்தும் இச்சமூகத்திலிருந்து அடித்துச் செல்லப்படும்வரை, அறிவியல் பண்பாடு மிகுந்த சமூகம் இங்கு உருவாகும்வரை காட்டாறுவின் பாய்ச்சல் தொடரட்டும். பகுத்தறிவுச் சமூகம் மலரட்டும்! வாழ்த்துகள்**

திராவிட, பகுத்தறிவு இயக்கங்களின் ஆரம்பகாலப் பத்திரிக்கைகளான திராவிடன், ஜஸ்டிஸ் தொடங்கி அய்யாவின் குடி அரசு, விடுதலை, உண்மை, சிந்தனையாளன், பெரியார் முழக்கம், பெரியார் பாதை, கருஞ்சட்டைத் தமிழர், இன்னும் பல என்ற வரிசையில் இன்று காட்டாறு ,

இதழ் துவங்கி ஓராண்டே ஆன நிலையில் வாழ்க்கையில் சாதி, மத, பாலின பேதமற்ற சமூகத்தை கட்டியமைப்பதற்கு அடிப்படையான குழந்தை வளர்ப்பில் துவங்கி அந்தக் குழந்தைகளின் கல்வி முறைகளில் பெரியாரியலின் தேவைகள் - குழந்தைகள் - மதமற்றவர்களாக வளர்ப்பதன் அவசியத்தை வலியுறுத்துகின்ற முனைவர்.பூ.மணிமாறன் அவர்களின் கட்டுரைகள் - குழந்தைப் பருவத்திற்கான செய்திகளைச் சிறப்பாக எடுத்துரைக்கின்றது.

அடுத்து இளம்வளர் பருவத்திற்கான காதல், காதலர் தினம், காதலைக் கொண்டாடுவது என்று இயற்கைக் காதலின் அவசியத்தைப் பேசுகின்ற தோழர்.பூங்குழலியின் சிந்தனைப் பாய்ச்சலைத் தொடர்ந்து...

திராவிடர் உணர்வுகளைப் பற்றி பேசுகின்ற அதேநேரத்தில் திராவிடர்களின் உணவே மருந்தாக விளங்கக்கூடிய உணவு முறைகள், வாழ்க்கை முறைகள் பற்றிய செய்திகளுடன், இந்து சனாதன திருமணமுறை சமூகத்திற்குக் கேடானது மட்டுமின்றி - இந்துத் திருமண உணவு முறை உடல் நலத்திற்குக் கேடானது என்ற கருத்துகளுடன் இன்று அரசியல் மயமாக்கப்பட்டுள்ள மாட்டிறைச்சியில் உள்ள சத்துகளின் பட்டியல் என்று உடல்நலம் பேணுகின்ற மருத்துவர் பெரியார் செல்வியின் உடல்நல ஆலோசனைகளைத் தாங்கி...

முத்தாய்ப்பாக இந்து சாதிய சனாதன வாழ்க்கை முறைகளுக்கெதிரான அறிவு சார்ந்த, அறிவியல் சார்ந்த வாழ்க்கை முறைகளை (சுயமரியாதை) முன் வைத்து வாதிடுகின்ற தோழர் அ.ப.சிவாவின் 'சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு' என்பதற்கு ஆதாரங்களாகத் திகழும் கட்டுரைகளை உள்ளடக்கி...

இடையிடையே இந்துத்துவ, ஆதிக்க ஜாதிய மனோபாவம் கொண்ட பழமைவாதிகளால் திட்டமிட்டு எழுப்பப்படுகின்ற பகுத்தறிவு, சமத்துவ, சமூக நீதிக்கெதிரான சமகாலப் பிரச்சினைகளாக உருவெடுத்த தாலி, மாட்டிறைச்சி, யோகா, முத்தப்பரிமாற்றம், மதுவிலக்கு, தேசியநூல், ஜல்லிக்கட்டு, முப்பாட்டன் முருகன், இராஜராஜ சோழன் என்று முரண்பாடான பிரச்சினைகளுக்கு ஆதரவு மற்றும் எதிர்ப்பு என்ற நிலைப்பாடுகளுடன் மறுக்க முடியாத ஆதாரங்களுடான தோழர் அதி அசுரன் அவர்களின் விவாதங்களை விரிவாகத் தொடர்ந்து வைக்கின்றது காட்டாறு..

பாலியல் கல்வி தொடர்பான கட்டுரைகளும், தமிழ்வாணன் பெண்ணியவாதியின் பெண்ணியம் தொடர்பான கட்டுரைகளும் காட்டாறுக்கு சிறப்பான பங்களிப்பைச் செய்கின்றன.

இவற்றுடன் 'அழியும் பேருயிர்' போன்ற சுற்றுச்சூழல் தொடர்பான கட்டுரைகள் மற்றும் நடுநிலையான திரைப்பட விமர்சனங்கள் என்று வேறுபட்ட தளங்களையும் அலசுகின்றது இந்த இதழ்.

இந்து, சாதிய சனாதன குருட்டு மூட நம்பிக்கைகள் அனைத்தும் இச்சமூகத்திலிருந்து அடித்துச் செல்லப்படும்வரை, அறிவியல் பண்பாடு மிகுந்த சமூகம் இங்கு உருவாகும்வரை காட்டாறுவின் பாய்ச்சல் தொடரட்டும். பகுத்தறிவுச் சமூகம் மலரட்டும்! வாழ்த்துகள்.

தோழமையுடன், இ.ச.திருநாவுக்கரசு

## கிருபாநந்தினி

சுற்றுச்சூழல் ஆய்வு மாணவர்
Division of Ecotoxicology
Sálim Ali Centre for Ornithology
and Natural History, Anaikatty



# "பெரியாரைப் படித்தவர்களே விமர்சிக்கிறார்கள்"

### என்று கூறுவது எதிர்மறையாகவே உள்ளது

காட்டாறு 'அறிவியல் பண்பாட்டு மாத இதழ்' என்பதைப் பருவம் '1', புனல் '1', முதல் பருவம் :1 ; புனல் :12 வரை தொடர்ந்து எந்த மாற்றமும் இன்றி பின்பற்றியிருக்கிறார் ஆசிரியர்.

முதல் புனலிலேயே முன் அட்டையின் உற்பகுதியில் பண்பாட்டையும், இரண்டாவது கட்டுரையாக 'மருந்தாகும் மாட்டின் கழிவுகள்' என்பதை அறிவியல் பூர்வமாகும் விளக்கியுள்ளதிலேயே நிரூபித்திருக்கிறார் ஆசிரியர்.

அறிவியல் ( நுண்ணுயிரியல் MICROBIOLOGY ) படித்த மாணவர்கள், எவர்களின் உறவுகளே மாட்டின் கழிவை சிறுநீரை வீட்டிற்குள் தெளிக்கும் நிலைகேலி கூத்தாகத்தான் உள்ளது. மனிதச் சிறுநீரும், மாட்டின் நீரும் கிட்டத்தட்ட ஒன்று என்பது படித்தவனுக்கு மட்டுமல்ல அனைவருக்கும் தெரிந்ததும் கூட. அதை இக்கட்டுரையில் அறிவியல் பூர்வமாக விளக்கியுள்ளது சிறப்பு.

சாதி அடிப்படையில் செயல்பட்டு வருகிற பார்ப்பனர்களின் கைக்கூலிகளான கார்ப்ரேட் நிர்வாகத்தின் முகத்திரையைக் கிழித்திரிக்கிறார்கள் பூங்குழலி மற்றும் யாழ்மொழி.

பெரியாரின் பிறந்த நாளில் மரணசாசனப் பதிவு செய்து அதை இதழிலும் வெளிபட்டிருப்பது நல்ல முயற்சி. நீங்கள் கூறியிருப்பது போலக் கண்டிப்பாக மாவட்டம் தோறும், ஆண்டு தோறும் தொடரும் படித்தவர் - படித்துவிட்டு மற்றவர்களிடம் விளக்கிக் கூறுவதன் மூலம் மட்டுமே.

'இந்திய வல்லாதிக்கத்தைத் தோலுரிக்கும்' - HAIDER' பற்றி காட்டாறு இதழில் படிக்கிறேன்.

முதலில் பிரபா அழகர் அவர்களுக்கு பாராட்டு. அவர் எழுதியிருக்கிற எழுத்து நடை ( சுதந்திரம் பெற்றதாக சொல்லப்படுகிற) பிடித்திருக்கிறது. இரண்டாவது தற்போது படித்து வேலைக்குச் செல்லும் நபர்கள் முதல், வீட்டில் சீரியல் பார்க்கும் பெண்கள் வரை ஒரு விசயத்தை பற்றி முழுமையாகத் தெரியாமல் தைரியமாக விவாதிக்கிறார்கள் என்றால் ஊடகங்கள் மூலம் புகுத்தப்படும் வதந்திகளேயே தொற்றுநோயாக தொற்றிக்கொள்கின்றன. அந்த வகையில் இந்திய இராணுவம் பற்றிய மோகம் சினிமா முதல் விளம்பரங்கள், குறும்படங்கள் வரை சென்ட்டிமெண்ட்டாகக் கூட புகுத்தபடுவதில் அதன் இயக்குனர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

அதை உடைத்து உண்மை வரலாற்றுடன் (தற்போது வரலாற்றையும் தலைகீழாக திருத்தம் செய்கின்றன பாடப்புத்தகங்களில்) விசயத்தை தெளிவாகப் படத்தை விளக்கியுள்ள படக்குழுவினருக்கு குறிப்பாக இயக்குனருக்கு இந்த இதழின் மூலம் பாராட்டும், வாழ்த்தும்.

அதை கட்டுரையாக இதழில் விளக்கியிருப்பது 'ஒரு சாதனையே' மருத்துவர் பெரியார் செல்வி எழுதியிருக்கும் உணவே மருந்து மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. ஆனால் தற்போது விளைவிக்கும் காய்கறிகளில் கலோரிகளுக்கு பதில் பூச்சிக்கொல்லி மருந்துகளும், வேதிப்பொருள்களுமே உள்ளது என்பது வருத்தமளிக்கின்றது.

தமிழ்நாடு மாணவர் கழகத்தினால் இயங்கிய செயல் கல்வி உரிமை சட்டம் செயல்பாட்டை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் சரி செய்தது பாராட்டுக்குரியது. குழந்தைகளை மதிப்போம் பகுதி மிகவும் அற்புதம். இந்த அறிவுரைகள் பெரும்பாலும் இளங்கலை முடித்த பெற்றோர்கள், கணவன் - மனைவி இருவரும் வேலைக்கு செல்பவர்களின் குழந்தைகளை Play school ல் சேர்த்து விடுகின்றனர்.

ஆசிரியர் கூறியிருக்கும் நேரமும், காதும் (மனமும்) இல்லை. விளையாட்டைக் கவனிப்பதில்லை கவனித்தாலும் ஊக்கப்படுத்துவதில்லை. அவர்களுக்கான விளக்கம் இந்தக் கட்டுரை.

எம்.எஸ்.எஸ் பாண்டியன் அவர்களின் வரலாறு ஒரு சாதனையாக உள்ளது ஆராய்ச்சி மாணவியான எனக்கு மேலும் மேலும் தைரியத்தை தந்துள்ளது இவரது வாழ்க்கை. ஆசிரியருக்கு நன்றி

பூப்புனித நீராட்டு விழா இக்கட்டுரையை படிக்கும் அனைவரும் அவர்களின் உறவுகளுக்கு எடுத்து சொல்ல வேண்டும், படித்துக் காட்ட வேண்டும் என்று நினைக்கிறேன். அந்த அளவிற்கு அறிவியல் ரீதியாக விளக்கியுள்ளார் ஆசிரியர்.

பெரியாரும் கல்வியியலும் – பாவம் முதுகலை முடித்த மாணவர்களுக்குக் கூட தெரியவில்லை அரசாங்கத்தின் உள்நோக்கம். அரசாங்கம் அண்மையில் அறிவித்திருக்கும் பேராசிரியர்களுக்கு முனைவர் படிப்புகளுக்கான கட்டாய தேர்வு ( NET, GATE, SLET ). இது தமிழ்நாட்டில் பல கிராமங்களில் இருந்து படிக்கும் மாணவர்களுக்கு புத்தகங்கள் கிடைப்பதில்லை. கிடைத்தால் தேர்வுக்கு விண்ணப்பிக்க மாவட்டத்தில் உள்ள ஒரு வங்கியில் மட்டுமே அனுமதி. அதைக் கடந்தபின் தேர்வு எழுத (சென்னை, கொச்சின், பெங்களூரு ) மூன்று நகரங்களில் மட்டுமே தேர்வு மையங்கள்.

இக்கட்டுரையில் கூறியிருப்பது போல அர்ச்சகனும், புரோகிதனும் உள்வாங்கி, தேர்வில் வாந்தி எடுக்கும் திறமையுள்ள பார்ப்பன மாணவர்களுக்கு மட்டுமே நடத்தப்படுகின்றன. இதைத் திறமை என நம்பி ஏமாந்து, தேர்விலும் தோல்வியுற்று – அடுத்த நிலைக்குச் செல்ல முடியாமல் இருக்கும் நம் தமிழ்மாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கட்டுரை.

பார்ப்பன வீட்டுப் பெண்கள்கூட இத்தேர்வில் வெற்றிபெற்று ஆராய்ச்சிப் படிப்பிற்கான உதவித்தொகை பெற்று எப்பவும் போல வெளிநாடு பறக்கின்றனர் அல்லது விஞ்ஞானிகளாகின்றன. இக்கட்டுரையை படித்த பின்னாவது எனது சகோதர, சகோதரிகள் விழிப்பார்கள் என்ற நம்பிக்கை.

நாப்கீன் அனுப்பும் போராட்டம் படிக்கும் போதே வலிக்கிறது ஒரு பெண்ணாக. ‘தூய்மை இந்தியா’ பற்றி பெருமை பேசுபவர்களும், இந்தியன் என்று முனங்கிக் கொண்டு திரியும் தமிழனுக்கு புரியும் வகையில் விளக்கியுள்ளார்.

காதலைப் புரிந்து கொள்வோம். தொடர் தற்போது காலக்கட்டத்தில் காதலர்கள், காதலித்து திருமணமானவர்கள், காதல் திருமணத்திற்குப் பின் பிறந்தவர்கள் மற்றும் இவர்கள் அனைவரையும் எதிர்க்கும் உறவுகளுக்குமான பாடமாகத் தொடர்வது மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளது.

இடஒதுக்கீடு அதற்கான கதை ( மேடு பள்ளம் ) முழுமையாகத் தெரியாமல் தாழ்த்தப்பட்ட மாணவர்களே “ஆமா மதிப்பெண் வைத்து வேலை தரலாமே எதற்கு சாதி இல்லைன்னு சொல்லிட்டு சாதி அடிப்படையில் வேலை கேக்கனும்?” சொல்லும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சமுதாயம் இக்கட்டுரையின் மூலமாவது புரிந்து கொள்ள வேண்டும். இவ்வளவு எளிமையாக யாராலும் கூற முடியாது.

மேடு பள்ளம் கட்டுரையைத் தற்போது எனது வாதங்களுக்கு நான் பயன்படுத்தி வருகிறேன். கதை ஆசிரியருக்கு நன்றிகள்.

அழியும் பேருயிர் :- யானைகள் ச. முகமது அலி அவர்களின் புத்தகத்தை முழுமையாகப் படித்துள்ளேன். காட்டாறு இதழின் மூலம் முற்போக்கு சிந்தனை உள்ள இயற்கை பாதுகாவலர் கட்டுரையைப் பரப்பிள்ளது எனக்கு திருப்தியாக உள்ளது.

**யோகாப் புரட்டு**

NO YOGA NO PEACE - KNOW PEACE KNOW YOGA

ஏன், எதற்கு, எப்படி என்று சிந்திக்காமல், அர்த்தம் தெரியாமல் இப்படி எழுதப்பட்ட T-Shirt அணிபவர்களுக்கான பதிலடி. கல்தோன்றா மண் தோன்றாக் காலத்தில் யோகா இல்லை. ஆனால் அமைதி இருந்தது. எமது தமிழர்களிடம் தற்போது யோகா புகுத்தப்பட்டு அமைதி குலைந்து விட்டது. சிந்தியுங்கள் சகோதரர்களே இக்கட்டுரையை படித்தாவது.

பருவம்: 1 புனல்: 2 காட்டாறு இதழை வாங்கவே கூடாது என்று சொல்லும் அளவிற்கு எதிர்ப்புகள் இருப்பதை படித்தேன். இதழை வாங்கக்கூட கூடாது என்று சிலர் சொல்லும் போதே, நீங்கள் கூறிவரும் கருத்துகள் அங்கே மாற்றத்தை ஏற்படுத்துகின்றன என்று தானே அர்த்தம்? இதற்கு வருந்தி பதில் கூறும் அவசியம் இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது.

விமர்சனங்கள் வருவது சிந்திப்பதாலும், கேள்வி எழுப்புவனாலும் தான். பெரியாரைப் படித்தவர்களே விமர்சிக்கிறார்கள் என்று கூறுவது எதிர்மறையாகவே உள்ளது. பெரியாரைப் படித்தவர்களால் மட்டும் தான் விமர்சிக்க முடியும் என்பது எனது கருத்து.

அப்படியே விமர்சித்தாலும் திருப்பி ஆரோக்கியமான முறையில் பதில்களை விளக்குவது பெரியாரைப் படித்தவர்களால் மட்டுமே முடியும். “பொதுவாழ்வில் ஓய்வும் சலிப்பும் தற்கொலைக்குச் சமம்” – தந்தை பெரியார்.

மொத்ததில் காட்டாறு இதழ் அடிப்படைப் பிரச்சனைகளான மொழி, பாலினம், சாதி ஆகிய மூன்றில் அறிவியல்பூர்வமாக, வரலாற்றை அடிப்படையாக வைத்தும் அதிகக் கவனம் செலுத்தி, பெரியாரின் கொள்கை 12 புனல்களிலும் (ஒரு வருடமாக) தொடர்ந்து நிலைநாட்டியிருப்பது தொடர்ந்து படித்து வரும் –தற்போது இருக்கும் சமூகத்திற்குக் குறிப்பாக இளைஞர்களுக்கு மிகப்பெரிய திருப்புமுனையாக இருக்கின்றது என்றே கூறலாம்.

ஏன் என்றால் நான் ஆராய்ச்சித் துறையில் இருக்கிறேன். படிக்காத ‘கூலி வேலை முதல் – அறிவைப் பயன்படுத்தி, விடை தெரியாத அல்லது தெரிந்தும் செயல்படுத்தாதவைகளுக்கு ஆராய்ச்சியின் மூலம் ஆணித்தரமாக, உண்மையைப் பகிரங்கமாக வெளியிடும், ஆய்வு முடிவு தெரிவிக்கும் விஞ்ஞானத்துறை வரை’ மொழி, பாலினம், சாதி ஆரியம், ஆண், பார்ப்பனர் ( ஆரியர் ) களின் ஆதிக்கம் மேலோங்கியுள்ளன.

எனது குடும்பத்தின் பின்புலம் ( பெற்றோர்கள் அவர்களின் மூலம் பெற்ற குடும்ப நண்பர்கள்) வழிக ாட்டுதலில் நான் இந்த ஆதிக்கத்தை ஒவ்வொரு நொடியும் போராடி, எதிர் கொண்டு தான் கடந்து செல்கின்றேன். மற்ற சகோதரனுக்கே கஷ்டம் அப்படியிருக்க பெண்களுக்கு? ஆதலால் தான் திருப்புமுனை எனக் கூறுகிறேன். இவ்விதழ் ஊக்கமளிப்பதாக உள்ளது.

வெற்றிக்கரமாக தொடங்கும் இரண்டாமாண்டு இதழிலிருந்து எனது ஆராய்ச்சியை நூலகத்திற்கும், மற்ற மாணவர்களுக்கும் பரிந்துரைக்கிறேன். என்னைப் போல் அனைவரும் இனிவரும் காலகட்டத்தில் எதிர்கொள்ள வேண்டும் என்பதற்காக. நன்றி

முனைவர் இரா.சுமதி
அரசூர்.

# நம் அளவுகோல் சிறந்ததுதான். ஆனால் அது நம் அளவுகோல் மட்டுமே!

மாதமொருமுறை சீராகப் பாய்ந்து வரும் காட்டாறு இதழ், பெரியாரியம் பேசும் இதழ்களில் சுவைமிகுந்த சிறுவாணி ஆறுபோல் நல்லிதழ். மழைக்காலங்களில் ஆற்றுநீர் செந்நீர் போல் காணப்படும். அதுபோல் சமூகநிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் சிறந்த இதழ்.

செப்டம்பரில் வெளியான ‘ஆபாசம்’ கட்டுரைப் பார்வை வித்தியாசமானது. ஆகஸ்ட் இதழில் வந்த மது ஏள மனு முரணாக உள்ளது. ஆரோக்கியக்கேடு, உடல்நலத்திற்குக் கேடு என்ற உண்மைகளை மறந்து விவாதித்திருப்பது சிறந்த அணுகுமுறை ஆகாது. இது ‘எனது கருத்துகளை அப்படியே ஏற்க வேண்டாம் சிந்தித்துச் செயல்படுக’ என்று கூறிய பெரியார் கருத்தை வாசகர்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்பதை உணர்த்துவதாய் இருந்தது.

மருத்துவம், திரை விமர்சனம், கல்வி அரசியல் விழிப்புணர்வு என்று பல்வேறு சமூகக் கூறுகளுக்கும் இவ்விதழ் விருந்தளிப்பது சிறப்பு.

அரசூர் அ.ப.சிவா எழுதிவரும் உரைநடைப்பாணி - எதார்த்தமான எழுத்துநடை பாராட்டுக்குரியது. அதில் (ஆகஸ்ட்) அப்துல்கலாம் பற்றிய பதிவில் ஈழத்தமிழர்களுக்கு, ஏன் நம் தமிழகப் பிரச்சினைகளுக்கு கலாம் என்ன செய்தார்? என்ற வினா சரியான கோணமாக இல்லை.

மொழிப்பற்று, நாட்டுப்பற்றைத் தாண்டி அறிவின் விரிவைப் பயன்படுத்தி உலகம் முழுதும் தமிழர்கள் விரிந்துள்ளனர். அந்த பிறநாட்டுக் கண்டுபிடிப்புகளையும் இணையம், முகநூல் போன்ற வசதிகளையும் நமது தேவைக்குப் பயன்படுத்திக் கொள்கிறோம். புகழுக்குரியர், சாதித்தவர்கள் எல்லாம் நம் இனத்திற்கு என்ன செய்தார்கள் என்று வினா எழுப்பி அவர்களது சாதனைகளை மறைக்கவோ, விலக்கவோ முடியுமா என்ன? முடியாது.

உங்களிடம் இதே வினாவை தமிழினத்திற்குப் பெரியார் என்ன செய்தார்? என்று கேட்டால், அவர் வேறு மாநிலத்தவராக வேற்று மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிராமல் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பச்சைத் தமிழனாகப் பிறந்திருந்தால் ‘தனித்தமிழகம்’ தமிழ்மொழியிலேயே கல்வி, தமிழக எல்லைச் சிக்கல்களுக்குத் தீர்வு, ஆற்றுநீர் பிரச்சினைகளின் தீர்வுகள் ஆகியவை அவர் வாழ்ந்த காலத்திலேயே தீர்ந்திருக்காதா? (தமிழனப் பற்றுக் கொண்டிருந்தால் கட்டாயம் சாத்தியப்பட்டிருக்கும்) வேற்று மாநிலத்தவராக இருந்ததால், ‘தமிழர் கழகம்’ என்றிராது ‘திராவிடர் கழகம்’ தோன்றியது.

மலையாளம், தெலுங்கு, கன்னடவர்களை தமிழருடன் சேர்த்து திராவிட நாடு செய்தது ஒரு பொது நலமாகும்போது, இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலத்தவரையும் என் நாடு என்று பற்றுக் கொண்டு நாட்டுப் பாதுகாப்பிற்கு, முன்னேற்றத்திற்கு தன் வாழ்நாளைச் செலவு செய்தவர் சாதனையை யாரால் மறுக்க முடியும்? முடியாது.

எனவே புகழை, புகழுக்குரியவர்களை அவரவர் துறையில் செய்த சிறந்த செயல்கள், சாதனைகளைக் கொண்டே மதிப்பிட வேண்டுமே தவிர நம் சொந்த அளவுகோலைக் கொண்டு அல்ல. நம் அளவுகோல் சிறந்ததுதான். ஆனால் அது நம் அளவுகோல் மட்டுமே. பிறருடைய அளவுகோல் வேறு. அதனால்தான் தமிழில் ‘யாதும் ஊரே; யாவரும் கேளிர்’ என்ற வைர வரிகள் இடம்பெற முடிந்தது. சாதனையாளர்கள் அளவுகோலுக்கு அப்பாற்பட்டவர்கள் கலாமும் அப்படியே.

தி.கருப்புசாமி பி.எஸ்.சி, பி.எல்
பொள்ளாச்சி.

# வீரிய விதை

இன்றைய உலகமயச் சூழலில், வணிகச் சிந்தனையும் தரகு நோக்கமும் மலிந்துவிட்ட, மனித உறவில் தன் உற்றார் உறவினர், நண்பர்களின் வாழ்க்கையைப் பற்றிக்கூட சிந்திக்க அவகாசமில்லாத அவசரக் கால கட்டத்தில், சக மனிதனை நேசிக்கும் மனப்பாங்குடன் பீறீட்டுக் கிளம்பியுள்ளது ‘காட்டாறு’.

மானுடம் சமத்துவத்தை நோக்கி நகர, மாற்றத்திற்கான வேட்கையுடனும், அர்ப்பணிப்புடனும் தங்களது உழைப்பையே மூலதனமாய்க் கொண்டு களமிறங்கியிருக்கும் ‘காட்டாறு’ இதழ்க் குழுவினருக்கு வாழ்த்துகள்.

சரியான உள்ளடக்கத்துடனும், சமகால விமர்சனத்துடனும் சமகால நிகழ்வுகளைப் பதிவு செய்யும் விதத்தில், ‘காட்டாறு’ வெற்றி பெற்றுள்ளது. ஆரம்பக் கால நவம்பர் 14 இதழே இதற்குச் சான்று. இவ்விதழில் வெளியான ‘அரபிக் கடலோரம் முத்தப்புயல் நாடெங்கும் அன்பு மழை’ என்ற கட்டுரை காவிகளின் கலாச்சார அடக்குமுறைக்கெதிராகக் கேரள இளைஞர்கள் கிளர்ந்தெழுந்ததை அற்புதமாய்ப் படம் பிடித்திருந்தது. அதே இதழில் ‘ஹைதர்’ திரைப்படத்தைப் பற்றிய கட்டுரை காஷ்மீர் மக்களின் துயரம் நிறைந்த அன்றாட வாழ்க்கைச் சூழலை அழுத்தமாகப் பதிவு செய்திருந்தது.

தொடர்களாக வெளிவந்த பூங்குழலி அவர்களின் ‘காதலைப் புரிந்து கொள்வோம்’ என்ற தொடர் அறிவியல்பூர்வமாகக் காதலை அணுகியிருந்தது.

டிசம்பர் இதழில் வெளிவந்த பூப்புனித நீராட்டு பற்றிய கட்டுரையும், ‘பாலியல்’ தொடரும் மக்களுக்குத் தேவையானவை. சமீபத்தில் வெளிவந்த இதழ்களில் ‘நாம் என்ன படிக்க வேண்டும் என்பதை காப்பரேட் கம்பனிகளே தீர்மானிக்கின்றன’ என்ற கட்டுரையும், கல்வியைப் பற்றி ‘பெரியாரும் பாவ்லோ பிரையரும்’ என்ற கட்டுரையும் சிறப்பானவை.

ஒரு கருத்தியல் மக்களின்பால் கரிசனமும் தன்னளவில் செரிவும், நேர்மையும் கொண்டிருந்தாலும் அது செயல்பட புறச்சூழல் தரும் அழுத்தமும், அமைப்பின் திறனும் அவசியமானவை. அந்த வகையில் பெரியாரியலுக்கான செயல்பாட்டு வடிவமும், திறனும் மேம்படுத்தப்பட வேண்டிய சூழலில் ‘காட்டாறு’ ஒரு வீரிய விதையாகச் செயல்பட இன்னும் தன்னை வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் மேம்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது.

குறிப்பாக ‘திராவிடம்’ என்ற சொல்லை இங்குள்ள ஓட்டுக்கட்சிகள் தன் பெயர்களில் சுமந்து திரிவதால், இவற்றிற்கும் பெரியாரியலுக்கும் யாதொரு தொடர்புமில்லை என்பதை இளைஞர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். பெரியாரியலின் பல்வேறு பரிமாணங்களைச் சமகால நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தி அதன் தேவையையும் அது வரலாற்றைப் புரட்டிப் போட்ட சாதனைகளையும் இளம்தலைமுறை முன் காட்சிப்படுத்த வேண்டியதே இன்றைய அவசர அவசிய தேவையாகும்.



வெ.ஜோதி
இடைநிலை ஆசிரியர்
மடத்துக்குளம்

# காதலைப் புரிந்து கொள்வோம்! – ஒரு தாயாய்ப் புரிந்து கொள்ள உதவியது

'காட்டாறு' கடந்து வந்த பாதைகளில் என்னைக் கவர்ந்தவையும், எனக்கான தேடல்களையுமாய் 'அறிவியலைப் பின்னுக்குத் தள்ளி - மத, மூட நம்பிக்கைகளையும், பெண் அடிமைச் சிந்தனை, சினிமா கிசுகிசு, வாஸ்து, ஜோதிடம் என வீணாப் போன சாக்கடை சந்தையில் அமோக விற்பனையை அள்ளித்தரும் குப்பைப் புத்தகங்கள் குவிந்து கிடக்குது.

ஆனால் காட்டாறு (காடு+ஆறு) பல மைல்கள் கடந்து காடு, மேடு, கழனி என கடமைகளைச் சுமந்து நம் கைகளுக்கு ஒரு அறிவுத்தேடலுக்கு ஊன்றுக்கோலாய் அறிய செய்திகளின் பிறப்பிடமாய், அறிவியலையும், பகுத்தறிவையும் இருகண்களாக எடுத்து வந்துள்ளது. பாமரனுக்கும் பகுத்தறிவை புகுத்தும் 'ஏடாய்' நான் பார்க்கிறேன். மானுடவியலைப் பகுத்தறிவு கொண்டு காணும் பகட்டில்லா ஏடுதான் இந்தக் காட்டாறு.

குழந்தைகளை மதிப்போம்! இவர்கள் நாளைய மனிதர்கள் அல்ல. இன்றைய மனிதர்களே! (டிசம்பர் -14) காட்டாறு. ஆசிரியராகிய நான் கற்றுக் கொள்ள கை கொடுத்தது.

தோழர் பூங்குழலியின் காதலைப் புரிந்து கொள்வோம்! என்ற கட்டுரை இது ஒரு 'வேதியல் நிகழ்வு' என்ற உண்மை ஒரு தாயாய்ப் புரிந்து கொள்ள உதவியது இந்தக் காட்டாறு.

தோழர் பெரியாரின் கல்வியியல் சிந்தனைகள், பெண் கல்வியின் பெரியாரின் சிந்தனை இன்று காவிமய மாகும் கல்வியை அன்றே கண்டித்து (26.3.1973) கூறியதையும் நினைத்துப் பார்க்கிறேன்! இப்படி ஒரு தீர்க்கதரிசியா?

தாலியை அறுத்தெரியும் வேலையே முக்கிய வேலை என குடிஅரசு (13.7.1930) இதழில் பேசிய பெரியாரின் மண்டைச் சுரப்பை உலகு தொழட்டும். (தாலி தமிழரின் அடையாளம் இல்லை).

Dr.பெரியார்செல்வியின் 'மாட்டிறைச்சியின் மகத்துவம்' எந்த ஒரு இஸ்லாத் ஏடும் இவ்வளவு தைரியமாய் எடுத்துக்கூறுமா? சந்தேகம் தான். உண்ணும் உணவிலிருந்து உடுத்தும் உடை வரை அரசியல், கலாச்சாரம் பண்பாடு எனக்கூப்பாடு போடும் குடுமிகளுக்கு மாட்டிறைச்சியின் மகத்துவம் சாவு மணி அடித்தது போல் காட்டாறு பாய்ந்ததாய்க் கருதுகிறேன்.

'சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு' தோழர் சிவாவின் 'சுயமரியாதைத் திருமணங்கள்' சாதிக்கும், ஆடம்பரத் திருமணங்களுக்கும் சம்மட்டி அடி கொடுத்துவிட்டது.

நிறைகள் நிறைய இருப்பினும் குறைகளாய் கொஞ்சம் உண்டு. மார்ச் மாத ஏடுகளில் ( மகளிர் தினம் ) சாவித்திரி பூலே, Dr.முத்துலெட்சுமிரெட்டி போன்ற பெரியார் - பொதுவுடைமைச் சிந்தனையாளர்களை நினைவூட்டிருக்கலாம்.

பெரியாரியல் சிந்தனையாளர்கள் கையில் மட்டும் காட்டாறு இதழ் இல்லாமல் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப் பட்டவர்கள், தமிழ் உணர்வாளர்கள், பொதுவுடைமைத் தோழர்கள் போன்றோரின் கையிலும் தவழுமா இந்தக் காட்டாறு? நன்றி வணக்கம்.

சூ.குணசேகரன்
5 ஏ, கீரைக்காரத் தெரு,
பவானி - 638 301.

# வருத்தத்துடன் . . . குணசேகரன்

காட்டாறு - அறிவியல், பண்பாட்டு மாத இதழ் ஆசிரியருக்கு வணக்கம். ஆகஸ்டு மாத இதழ் படித்து மிக வேதனையுடன் இக்கடிதம் எழுதுகிறேன். முன் அட்டையிலிருந்து பின் அட்டைவரை பக்கத்திற்கு பக்கம் மதுவிற்கு ஆதரவான செய்திகள், கட்டுரைகள் மற்றும் பெரியார் அம்பேத்கரின் தொகுப்பிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட துணுக்குகள் கண்டு வேதனையாக இருக்கிறது.

அவர்கள் என்றோ, எந்தச் சூழ்நிலையில் சொன்ன வார்த்தைகள் இன்று எப்படி பொருந்தும், வாதத்திற்காக வைத்துக் கொண்டாலும் அவர்கள் சொன்னது எல்லாம் சரியென்று எப்படி எடுத்துக் கொள்ள முடியும். இன்று குடியினால் பாதிக்கப்படாத குடும்பங்கள் என்று தமிழ்நாட்டில் இருக்கின்றார்களா? மதுவிலக்கு கொண்டுவந்தால் கள்ளச்சாராயம் பெருகி மக்கள் பாதிக்கபடுவார்கள் என்கிறீர்கள். நீங்கள் மேற்கோள் காட்டிய அம்பேத்கார் வாதத்திலிருந்தே, டாஸ்மாக் குடிகாரர்களைவிட கள்ளச்சாரய குடிகாரர்கள் குறைவாகத்தானே இருப்பார்கள். சிறுபான்மையான அவர்களைப்பற்றி அக்கறைப்படும் நீங்கள், டாஸ்மாக் கடைகளால் பாதிக்கப்படும் குடும்பங்கள்பற்றி நினைத்துப் பார்த்தீர்களா? கடந்த சில வாரங்களாக ஆனந்த விகடன் இதழில் வெளிவரும் குடியினால் அழிந்துவரும் குடும்பங்கள்பற்றி படித்துப் பார்க்கவும்.

மேலும் உங்கள் நிலைப்பாட்டிற்கு ஆதரவாக பெரியார், அம்பேத்கர் பேச்சிலிருந்து வெட்டிவெட்டி வெளியிடுகிறீர்களே, இதைத்தானே பெரியார் எதிர்ப்பாளர்களும் செய்கிறார்கள். இரண்டுக்கும் என்ன வேறுபாடு. விளக்கம் அளிப்பிர்கள் என்று நம்புகிறேன். நிற்க இனிவரும் காலங்களில் தி.வி.க நிகழ்ச்சிகளில் வழக்கமாகப் பரிமாறப்படும் மாட்டுக்கறி அசைவவிருந்துடன் மதுவும் பரிமாறப்படும்தானே. மகளிர் அணியினரும் மதுவிருந்தில் பங்கேற்பார்கள்தானே. நாம்தான் புறநானூற்றுக் காலத்திலிருந்தே குடும்பம் குடும்பமாக கள் குடித்து மகிழ்ந்தவர்கள் ஆயிற்றே?

வீரா பாலு

# பாட்டாளி வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பண்பாடாக இருக்கவேண்டும்

காட்டாறு அறிவியல் பண்பாட்டு மாத இதழ் குழுவினருக்கு வணக்கம்.கடந்த நான்கு ஐந்து மாதங்களாக தொடர்ந்து காட்டாறு இதழை படித்து வருகிறேன். அதுகுறித்த அனுபவங்களை நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன் .

ஆயிரம் சந்தா சேகரிக்க வேண்டும் என்ற இலக்கோடு பயணிக்க துவங்கிய நீங்கள் ஆயிரத்தை கடந்து இன்னும் தொடர்ச்சியாக முன்னேறி கொண்டு இருக்கிறீர்கள் அதற்கு முதலில் என் வாழ்த்துக்களைச் சொல்லி விடுகிறேன் .

அட்டை வடிவமைப்பில் தொடங்கி புத்தகத்தின் கட்டுரைகள், தொடர்கள் அனைத்திலும் சிறப்பாகச் செயல்படுகிறீர்கள் .இந்த பயணம் தொய்வில்லாமல் தொடர வாழ்த்துக்கள் .

குறிப்பாக ‘பாலியல் கல்வி’ குறித்த தொடர் கட்டுரைகளும், சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு என்னும் தொடரும் சிறப்பாக இருக்கிறது . இது போன்ற இன்னும் ஆக்கப்பூர்வமான கட்டுரைகளை கொண்டு வரவேண்டும்

தோழர் அதி அசுரனின் எழுத்துக்களும் சிறப்பாக இருக்கிறது மது குறித்த கட்டுரை தவிர. அதே போல தந்தை பெரியார் அவர்களுடைய எழுத்துக்களை எல்லா இதழ்களிலும் கொண்டு வருகின்றீர்கள் அருமையான விசயம். அத்தோடு அம்பேத்கர் எழுத்துகளுக்கும் இதழ்தோறும் ஒரு பக்கத்தை ஒதுக்கினால் சிறப்பாக இருக்கும்.

புத்தக விமர்சனம் ,புத்தக அறிமுகம், சமூக அவலங்களைப் பேசும் கதைகள், கட்டுரைகள் மொழி பெயர்ப்புக் கட்டுரைகள், நடப்பு அரசியல் நிகழ்வுகள் குறித்த ஆக்கப்பூர்வமான கட்டுரைகள் போன்றவற்றையும் உங்கள் இதழ்களில் இடம் பெறச் செய்யுங்கள் அது இன்னும் இதழைச் செழுமைப் படுத்தும்.

மது, பாலியல் போன்ற கூர்மையான பதிவுகளை எழுதும் போது இன்றைய அரசியல் கண்ணோட்டத்தோடு பொருத்திப்பார்த்து ,மேட்டுக்குடி மனோபாவத்தை தவிர்த்து உழைக்கும் மக்களின் பக்கம் இருந்து எழுதுங்கள்.நம் தேவையும் அதுதான் .

காட்டாறு இதழ் விரும்பும் பண்பாடு என்பது பாட்டாளி வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பண்பாடாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன்.

பெரியாரியம் வளரும் தத்துவம். அதைச் சுருக்கிவிடாமல் எல்லாச் செய்திகளையும் உலகக் கண்ணோட்டத்தோடு அணுகுங்கள் .மேலும் காட்டாறு இதழ் வளரவும் செழுமை அடைந்து எல்லோராலும் விரும்பி வாசிக்கப்படவும், சமூகத்தில் முற்போக்குச் சிந்தனைகளை வளர்க்கவும் உதவும் என்று மனதார நம்புகிறேன். காட்டாறு இதழின் தோழர்களுக்கு மனப்பூர்வமான வாழ்த்துக்கள் .

# காட்டாறு இதழ், இன்னும் செல்ல வேண்டிய தொலைவும் பரவ வேண்டிய பரப்பும் மிகுதியானது.

சூ.ந. பன்னீர் செல்வம்
பாவேந்தர் பேரவை, சூலூர்

அன்புள்ள ஆசிரியருக்கு, வணக்கம். காட்டாறு இதழ் தொடங்கப்பட்டு, ஓராண்டாக இடை நில்லாப் பயணம் மேற்கொண்டிருப்பதே ஓராண்டு வெற்றியாகும். ஏனெனில், முற்போக்கு இயக்கங்களின் தோழர்கள் ஒன்று சேர்ந்து செய்திகளைப் பரிமாறிக் கொள்ளத் தொடங்கும் போது, அதன் இணை வினையாகவே எழும் எதிர்பார்ப்புதான், ''நம்ம கருத்த எந்த பத்திரிக்கை வெளியிடுது தோழர்!, நமக்கென ஓர் இதழ் இருந்தால் நமக்கு வசதிதானே!''.

இந்தச் சிந்தனை எல்லா முற்போக்கு இயக்கங்களுக்கும் அதன் தோழர்களுக்கும் தோன்றுவது இயல்பு. தோன்றாமலிருந்தால் அது முற்போக்குக் கருத்துக்களை உடைய இயக்கமன்று என்றுகூட முடிவு செய்து கொள்ளலாம். ஏனெனில் தோழர்களின் சிந்தனைப் பரப்பின் எல்லை வரையறுக்க முடியாதது. அதில் ஆக்கச் சிந்தனையும் இருக்கும்; அழிவுச்சிந்தனையும் இருக்கும். வலியதுதான் நிலைக்கும் என்னும் இயக்கவியல் நடைமுறைப்படி, தகவமைத்துக் கொள்ளும் திறனுடைய செய்திகள் நிலைக்கும்; மற்றவை கரைந்து போகும். இருப்பினும் தொடக்க நிலைத் தோழர்களின் மனங்களில் ஏற்படும் கேள்விகள் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

வழமையாகவே நாம் அனைவருக்கும் சொல்லும் அறிவுரை, ''புத்தகம் படியுங்கள், அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்'' என்பதுதான். இது பொதுவான உண்மை என்றாலும் எல்லோருக்கும் பொதுவாகப் பொருந்துமா? என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஏனெனில் நூறுபக்கம் இருநூறு பக்கங்கள் இருக்கும் புத்தகங்களைப் படிப்பதென்பது அவ்வளவு எளிதான செயல் அன்று. எளிய மனிதர்களுக்கு எட்டாத செயல் அது. மெத்தப் படித்ததாகக் கூறப்படும் மேதைகள் கூட அவர்கள் குறிப்பிடும் எல்லாப் புத்தகங்களையும் படித்திருப்பார்கள் என்பதும் அய்யமே! நூறு விழுக்காடு கல்வியறிவு பெற்ற சமூகங்களில் கூட பொதுவான வாசிப்பு என்பது குறைவாக உள்ளதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இவற்றை இங்கே குறிப்பிடுவதற்கான காரணங்கள் மிகத் தெளிவானது. பாட நூல்களைத் தவிர்த்த பிற புத்தகங்கள் படிப்பது என்பது, இங்கே துறவிகள் மேற்கொள்ளும் தவம் போன்றது. மிகப் பெரும்பான்மையோர் செய்யும் செயல் என்று மதிப்பிட முடியாதது. எனவே, நம் தமிழ்ச் சமூகம் நூற்றாண்டுகளாக கல்வி மறுக்கப்பட்ட சமூகம்; வாழ்வில் படிப்பின் சுவையை மறந்தே போன சமூகம். திராவிட இயக்கங்களின் தோற்றம் வளர்ச்சியினால் ஓரளவுக்கேனும் உரிமை பெற்று முன்னேறி வரும் சமூகம்.

எனவே, நல்ல புத்தகங்களின் படிப்பு என்பது பெரும் மலையின் சிகரம் போன்றது. சிகரத்தின் உச்சியை அடைய ஏராளமான தடைகளைக் கடந்து படிப்படியாகப் பயணம் செய்தாக வேண்டும். பெரும் புத்தகங்களின் வாசிப்புக்குத் துணை செய்பவைகளாக இதழ்கள் அமைய வேண்டும். நாளிதழ்கள் என்பவை நடப்புச் செய்திகளைத் தருபவை மட்டுமே! ஒரு வாசகனின் சிந்தனை வளத்திற்கான தரவுகளை மட்டுமே அவை தரமுடியும். மாத, கிழமை இதழ்கள்தான் செய்திகளுக்கு இடையேயிருக்க செய்திகளை வெளிக்கொணர உதவுகின்றன.

குசராத்தில் இட ஒதுக்கீடு கோரி படேல் வகுப்பு மக்கள் போராட்டம் என்ற நாளிதழ் செய்திக்கு, தமிழகத்தின் தலைவர் ஒருவர் ''காந்தி பூமியில் பெரியார் நுழைந்து விட்டார்'' என்று அடுத்த நாளிதழிலேயே கூறினார். ஆனால் கிழமை ஏடுகள், அது இட ஒதுக்கீடு கோரும் போராட்டமன்று ; ஒட்டு மொத்த சமூக நீதியைக் கொல்லும் போராட்டமென்று படம் பிடித்துக் காட்டின. எனவே மாத, கிழமை ஏடுகள் என்பவை பெரும் தத்துவங்களைப் புரிந்து கொள்வதற்கான தொடக்க நிலைப் பயிற்சிகளை வழங்குவதாகவும், நடப்புச் செய்திகளை முற்போக்கு அறிவியல் நோக்கில் அறிமுகப்படுத்துவதாகவும் அமைய வேண்டும் என்பது பெருவாரியான அறிஞர்களின் கருத்து.

அவ்வாறே, காட்டாறு இதழ் அப்பணிகளை செய்து வருவதாக எண்ணுகிறேன். ஈழப்போராட்டத்திற்குப் பிறகான

இன்றைய ஈழப்பகுதிகள், எவ்வாறு மத மயமாக்கப்பட்டிருக்கின்றன என்பது ஆகச்சிறந்த கட்டுரையாகும். எந்த ஓர் ஊடகமும் எடுத்தியம்பாத நோக்கில் மதவாதிகளின் முன்னெடுப்புகளை உணர்த்தியது ஈழப் போராட்ட ஆதரவாளர்களுக்கு எச்சரிக்கையுடன் கூறிய முன்னறிவிப்பாகும்.

தாய்மொழி வழிக் கல்விதான் எல்லாச் சமூகத்திற்கும் ஏற்றது. ஏற்றத் தாழ்வில்லாத சமூகம், கல்வி என்கிற அடிப்படைக் கட்டுமானத்தின் மேல்தான் கட்டப்பட வேண்டும். அந்தக் கட்டுமானமே உறுதியற்று இருந்தால், நாம் விரும்பும் மாளிகை எங்ஙனம் சாத்தியமாகும்? எனவே பொதுப்பள்ளி முறையிலான அரசு செலவில் நடைபெறும் தாய்மொழி வழிக் கல்விதான் ஒரே தீர்வு என்னும் இலக்கை நோக்கிலான செய்திகள் - கருத்தாடல்கள் இடம் பெற வேண்டும்.

மருத்துவ அறிவியலும் நோய் தீண்டா வாழ்க்கை முறைகளையும் சூழல் நலம் பேணும் கட்டுரைகளையும் கூடுதலாக இடம் பெறச் செய்யலாம். அ.ப. சிவா அவர்களின், உரையாடல் வடிவிலான கட்டுரை , பல தோழர்களை வெகுவாக ஈர்க்கும். தங்களின் நடைமுறை உரையாடல்களே கட்டுரையிலும் தொடர்வதால், எளிதில் அச்செய்திகள் அவர்களின் மனங்களில் இடம் பெறும். குழந்தைகள் பங்குபெறும் வகையில், முற்போக்கு செய்திகள் அடங்கிய குறுக்கெழுத்துக் கட்டங்களை நிரப்பி Whatsapp க்கு அனுப்பி வைக்கச் சொல்லலாம்.

அந்த மாதத்தில் அதிகம் பேசப்பட்ட செய்திகளில் ஒன்றை ஒட்டி, முற்போக்கு நோக்கில் எவ்வாறு அணுக வேண்டும் என்ற பயிற்சியைத் தரும் வகையில் அட்டைப்படக் கட்டுரை அமையலாம். தொடக்க இதழ்களில் காணப்பட்ட எழுத்து, ஒற்றுப்பிழைகள் குறைந்துள்ளன; எனினும் மொத்தமாக நீங்கவில்லை; கவனம் தேவை! சமூகத்தூய்மையை விரும்பும் நாம் மொழியிலும் அதனைப் பின்பற்ற வேண்டும்.

காட்டாறு இதழ், இன்னும் செல்ல வேண்டிய தொலைவும் பரவ வேண்டிய பரப்பும் மிகுதியானது. அடைய வேண்டிய இலக்கு, அனைவரும் விரும்பும் சமத்துவம்தான்! அதில் மாற்றுக் கருத்துகளே இருக்க முடியாது!

காட்டாறு இதழ், வெகு மக்கள் விரும்பும் இதழ்களின் தரத்திற்கு உயர, பல்வேறு கணக்கெடுப்புகளை கவனத்தில் கொள்ள வேண்டும். பல்வேறு பிரிவு மக்களின் நலன்களையும் உள்ளடக்கியதாக அமைந்தால் சிறப்பு. திரைப்படத் திறனாய்வுக் கட்டுரைகள் தொடர்ச்சியாக வெளிவர வேண்டும். ஒரு குறிப்பிட்ட பக்கத்தை நூல் அறிமுகத்திற்காக பயன்படுத்த வேண்டும். அத்திறனாய்வு, அந்நூலைப் படிப்பதற்கான தூண்டுதலை வாசகர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். எந்த வழியில் எவ்வளவு வேகத்தில் என்பதும் தொடர் வண்டியின் இன்ஜின் மட்டுமா? அல்லது கூடுமானவரை கூடுதல் பெட்டிகளை இழுத்துக் கொண்டுமா என்பதும் இதழ் நெறியாளர்களின் செயல்பாடுகளில் உள்ளன. காட்டாறு இதழ், அதன் நோக்கில் வெல்லட்டும்! தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் பரவட்டும்! நன்றி!

சூ.ந. பன்னீர் செல்வம்




காட்டாறு மட்டுமல்ல, பெரியாரியலை பேசுகின்ற பல்வேறு இயக்கங்களும் இன்றைக்கு மதுவினால் அழிந்து கொண்டுள்ள தமிழகத்தை மீட்கும் போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. அவர்களின் புரிதல் வேறு மாதிரியாக உள்ளது.

பழ.ரகுபதி
ஊடகவியலாளர். திருப்பூர்

# தெளிவான பாதையின்றி பயணிக்கும் காட்டாறு..!

காட்டாறு தமக்கான பயணத்தைத் துவக்கி ஆண்டு ஒன்றாகி விட்டுள்ளது. துவக்க காலந்தொட்டு வாசித்து வருகிறேன். பெயருக்கு ஏற்றார்போல் காட்டாறு தறிகெட்டு ஓடுகிறது.

அதற்கான தெளிவான பாதையை இன்னும் வகுத்துக் கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது. ஒரு பத்திரிக்கையை நடத்துவது என்பதும் அதனைத் தொடர்ந்து மாதந்தோறும் கொண்டுவருவது என்பதும் சாதாரண வேலையல்ல. இயக்கம் நடத்துவதைக் காட்டிலும் பத்திரிக்கை நடத்துவது கடினமான வேலை. இயக்கம், பத்திரிக்கை என இரண்டு தளங்களிலும் வேலை செய்வதால் எமக்கு அதன் துயரங்களை நன்கு தெரியும்.

காட்டாறு ஓராண்டு கடந்து வந்துள்ளதே ஒரு சாதனைதான். இந்த பத்திரிக்கை பெரியாரியல் சிந்தனையுள்ள இளைஞர்களால் நடத்தப்படுகிறது. அடுத்து, திராவிடர் விடுதலை கழகத்தினை சார்ந்து நடத்தப்படுகிறது என்னும் புரிதலோடு படிக்கத் தொடங்கினேன். ஆனால், இப்போது, திராவிடர் விடுதலை கழகத்தினை சார்ந்த இதழ் அல்ல என்று வெளிப்படையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாரைச் சார்ந்து பத்திரிக்கை வருகிறது என்பதைக் காட்டிலும், இந்த சமூகத்திற்கு இந்தப் பத்திரிக்கை என்ன கருத்தைச் சொல்ல வருகிறது என்பது முக்கியமானது. பெரியாரியல் சிந்தனைகளைத் தாங்கி வந்த இதழில் பெயருக்கு ஏற்றவாறு காட்டாறைப் போலவே, தெளிவான பாதையின்றி பயணித்துக் கொண்டுள்ளதாகவே படுகிறது. ஆனாலும்கூட, ஓராண்டு முடிவில் விமர்சன இதழாக, மலராக வெளியிட முடிவெடுத்துள்ளது வரவேற்கத்தக்கது.

சமூகமாற்றம் என்பது எதையும் கண்ணை மூடிக்கொண்டு எதிர்ப்பதாகிவிடாது. எதைப்பேசினாலும், எழுதினாலும் அன்றைய காலகட்டத்தில் பெரியாரால் எழுதப்பட்ட, பேசப்பட்ட தொகுப்புகளை வைத்துக் கொண்டு எழுதுவது என்பது அறிவியல் பார்வை ஆகிவிடாது. பெரியாரின் பார்வை என்பது அறிவியல் சார்ந்தது. அறிவியல் என்பது புதிய மாற்றங்களுக்கு உட்பட்டது.

வான்வெளியிலும், நடைமுறையிலும் அறிவியல் தனக்கான பாதைகளை மாற்றிக் கொண்டு வளர்ச்சிப் பாதையில் பயணிக்கிறது. புதிய புதிய கண்டுபிடிப்புகள் உருவாகின்றன. ஆக, பெரியார் அன்றைக்கு சொன்னதையே கெட்டியாகப் பிடித்துக் கொண்டு எல்லாவற்றையும் எதிர்ப்பதை காட்டாறு செய்து கொண்டிருக்கிறது.

இது, எந்த வகையிலான சமூக மாற்றம் என்று எமக்குத் தெரியவில்லை. அன்றைக்கு பெரியார் இந்துப் பத்திரிக்கை என்ன எழுதியதோ அதற்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டாலே அது நம்மக்களுக்கு நல்லதாக இருக்கும் என்னும் பொருளில் பேசினார், எழுதினார்.

ஆனால், இன்றைக்கு அப்படியில்லை. பார்ப்பனரல்லாத பலரும் இந்துப்பத்திரிக்கையைக் காட்டிலும் அவாள்களுக்கு ஆதரவாக பார்ப்பனர்கள் அல்லாதவர்களே எழுதுகிற, நிற்கின்ற நிலையைக் காண்கிறோம். ஆக, இன்றைக்கு மாற்றம் தேவைப்படுகிறது. இன்றைய தமிழ் இந்து போன்ற பத்திரிக்கைகள் தமிழர்களுக்கு ஆதரவான செய்திகளை வெளியிடுகின்றன.

பார்ப்பனர்களால் நடத்தப்படும் விகடன் குழுமம் பல்வேறு நிலைகளில் தமிழர்களுக்கு ஆதரவான போக்கைக் கையாண்டு வருகின்றன. அதற்கு பெரியாரும் ஒரு காரணம். அந்தப் பத்திரிக்கைகளில் பார்ப்பனர் அல்லாதவர்கள் பல்வேறு பணிகளில் இருக்கிறார்கள். பல உண்மைகளை அதன்மூலமாகக் கொண்டுவர முயலுகிறார்கள். ஆக இப்போது சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஆகவே, நமது கருத்துக்களையும் மாற்றவேண்டியதாகியள்ளது.

கடைசியாக சில மாதங்களுக்கு முன்பு வெளிவந்த காட்டாறில் மது விலக்கு பைத்தியகாரத்தனம் என்பது போலவும், மது அருந்துவது சுதந்திரத்தின் அடையாளம் என்பது போல் ஒரு செய்தியைக் காட்டாறு இதழ் வெளியிட்டது. அதற்கான விமர்சனத்தையும், ஆட்சேபனைகளையும் நாமும் தெரிவித்தோம். அதனையும் கடந்த செப்டம்பர் இதழில் வெளியிடப்பட்டது. கருத்துரீதியான பதிலுக்கு மதிப்பளிப்பதாகவே அதைப் பார்க்கிறேன்.

காட்டாறுவுக்கும் அதனை நடத்தும் குழுவுக்கும் என்று ஒரு கருத்து இருக்கலாம். ஆனால், அது, மக்களின் நலன் சார்ந்தும், சமூக மாற்றத்தின் நலன் சார்ந்தும் இருக்க வேண்டும் என்பது எங்கள் விருப்பமாக இருக்கிறது. சமூகநீதிக்காகப் போராடுகிற எவரும் மக்கள் விரோதமான நடவடிக்கைகளுக்குத் துணைபோகாமல் இருக்க வேண்டும் என்ற ஆவல்தான் இதற்குக் காரணம்.

காட்டாறு மட்டுமல்ல, பெரியாரியலை பேசுகின்ற பல்வேறு இயக்கங்களும் இன்றைக்கு மதுவினால் அழிந்து கொண்டுள்ள தமிழகத்தை மீட்கும் போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. அவர்களின் புரிதல் வேறு மாதிரியாக உள்ளது. இது எப்படியான அறிவியல் பார்வை என்று விளங்கவில்லை. அறிவியல் காலத்திற்கு ஏற்றார்போல் தம்மை மேம்படுத்திக் கொண்டது அதனால், அறிவியல் வளர்ந்தது.

பெரியாரியல் சிந்தனைகளும் அறிவியலோடு தொடர்புடையது. ஆனால், 1974 ல் பெரியார் இறந்தற்குப் பின்னால் தம்மை மேம்படுத்திக் கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது. அதன் விளைவுதான் இன்றைக்கு மது ஒழிப்புப் போராட்டங்களில் பெரியாரில் இயக்கங்கள் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. ஆகவே, பெரியாரியலை மையப்படுத்தி வெளிவரும் காட்டாறும் திக்கற்று பயணிப்பதில் வியப்பேதும் இல்லை.

ஓராண்டு ஓடியுள்ள காட்டாறு தமக்கென ஒருபாதையை அமைத்துக் கொண்டிருக்க வேண்டும். இன்னும் அதற்கான பாதை அமையவில்லை என்பது எங்கோ சருக்கல் உள்ளதையே காட்டுகிறது. தெளிவான பாதையும்.. பார்வையும் மட்டும்தான் சரியான இலக்கை நோக்கிய பயணத்திற்கு வழிவகுக்கும். காட்டாறு தமக்கன பயணம்.. செல்ல வேண்டிய இடத்தை தீர்மானித்து விட்டதா? என்கிற கேள்விகள் எழுகின்றன.

இன்றைய சமூகச்சூழலுக்கு முரண்பாடான கருத்துக்களை பெரியாரே சொல்லியிருந்தாலும் அதனை மறுத்து, பரிசீலித்து புதியபாதைக்கு வழிவகுப்பதே உண்மையான சமூகநீதியை மக்களுக்குப் பெற்றுத்தர வழிவகுக்கும். அதைவிடுத்து அரைத்த மாவையே மீண்டும் மீண்டும் அரைத்துக் கொண்டிருந்தால் காட்டாறு மாற்றத்தைத் தராது; ஏமாற்றத்தையே மக்களுக்குக் கொடுக்கும். காட்டாறு எங்கு செல்ல வேண்டும் என்பதை அந்த குழு பரிசீலிக்க வேண்டிய தருணம் இது. காட்டாறு என்ன செய்யப் போகிறது?



**பொன். முருகானந்தம்**
போக்குவரத்துத்துறை, திண்டுக்கல்

# யோகாவை எதிர்ப்பதும், மதுவை ஆதரிப்பதும் ஒரே வகையைச் சேர்ந்ததே !

**இதழ் - 1 : அக்டோபர் 2014**

மதக்கட்டுக்களுக்கு எதிரான விடுதலைவெளி கன்னல் எழுதிய கட்டுரை ஒரு முற்போக்கு -சமத்துவ சமூக அமைப்பை முன்மொழிகிறது. பசுவும், பார்ப்பனரும் மே.கா.கிட்டு எழுதிய கட்டுரை பி.ஜே.பி ஆட்சிக்கு வருமுன் எழுதப்பட்டு, பா.ஜ.க வின் இன்றைய நிலையை தெளிவாக படம் பிடித்துள்ளது.

திராவிடர் உடைகள் - அதிஅசுரன் கட்டுரையில் வேட்டி, சேலை, பாவாடை, தாவணி போன்ற இந்துமத அடையாளங்களை விட்டொழிக்க வேண்டும் என்பதாகக் குறிப்பிட்டுள்ளார். உடை என்பது காலத்துக்கு காலம் மாறிக்கொண்டே வந்துள்ளது. வேட்டி, சேலை என்பது இன்றைக்கும் பயன்பாட்டில் உள்ளது. அதே சமயத்தில் ஆண்கள் பேண்ட் அணிவதும், பெண்கள் சுடிதார் அணிவதும் மாறிக்கொண்டு வருகிறது. பழைய தலைமுறையினர் வேட்டி, சேலையைப் பயன்படுத்துவதால் அவர்களை இழிவாகக் கருதுவதோ, நடத்துவதோ அறிவுக்குகந்ததல்ல. அதே போல அந்த உடைகளை இந்துமத அடையாளம் என முத்திரை குத்துவது தவறானதே. மேலும் வேட்டி, சேலையைத் தமிழர்களின் தேசியஉடை என சொல்லிக்கொண்டு மாற்றத்தை எதிர்ப்பது பிற்போக்குத்தனமே. பருத்தி ஆடைகளே நமது வெப்பச்சூழலுக்கு பொருத்தமானது. அது வேட்டியோ, பேண்டோ எதுவாகவும் இருக்கலாம். ஜீன்ஸ் என்பது நமது வெப்பச் சூழலுக்கு உகந்ததல்ல. இதை அணிந்து பார்த்தவர்கள் உணர முடியும்.

மரண சாசனப் பதிவு : தீண்டாமை ஒழிப்பு சட்டத்தில் இருப்பது போலவே மரணசாசனமும் ஆகிவிட அதிக வாய்ப்புள்ளது. ஒரு நாத்திகரின் இறப்பின்போது அவரைப் போன்ற உணர்வாளர்கள் உடன் இருந்து முன்முயற்சி எடுத்தால்தான் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியும்.

இதழ் 4 ஜனவரி 2015

ஜல்லிக்கட்டு : விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள் அன்றைக்கு ஏற்படுத்திக் கொண்டிருந்த ஒரு விளையாட்டு முறையே. அது முற்போக்கா? தேவையா? என விவாதப்படுத்துவது சரியானதே. அதற்காக இதை இந்து - ஆணாதிக்க - ஜாதி ஆதிக்கப் பண்பாட்டுவிழா என முத்திரை குத்துவது சரியா? ஜாதியும், ஆணாதிக்கமும் உள்ள சமூகத்தில் விளையாட்டிலும் அதன் கூறுகள் வெளிப்படுவது சாத்தியமே. அதற்காக அந்த விளையாட்டுக்கு இந்துமத முத்திரை குத்துவது பொருத்தமாகப்படவில்லை. வீரவிளையாட்டு என கூறுவதும் இன்றைய காலத்திற்கு பொருத்தமற்றதே.

**இதழ் 5 பிப்ரவரி 2015**

மனுநீதி, கம்பராமாயணம், பெரியபுராணங்களைக் கொளுத்துவோம் - அறிஞர் அண்ணா கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. அண்ணா தனது இறுதிக்காலத்தில் கம்பரசம் எழுதியதற்காக வருந்தியதாக பதிவுகள் உள்ளன. காதலர் தினத்தைப் பொறுத்தவரை நாம் ஜாதிமறுப்பு, மதமறுப்பு நோக்கில் பார்ப்பது சரியே. ஆனாலும் திருமண வயதை எட்டாத பதின்பருவ வயதினர், மாணவர்கள் காதலின் பெயரால் படிப்பையும், எதிர்கால வாழ்க்கையையும் தொலைத்து விடாதவாறு விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியம். இந்தக் கோணத்தில் பெற்றோர்களின் கவலையை எதிர்பார்ப்பைக் கணக்கில் கொள்ளப்பட வேண்டும். அந்த வகையில் தோழர் பூங்குழலியின் காதலைப் புரிந்து கொள்வோம் கட்டுரை வெளிவந்தது பாராட்டுக்குரியது.

அன்று மனுதர்மம், இன்று தமிழ்த் தேசியம் – கட்டுரை குறித்து: பெரியார் அமைப்புகள் சில இருப்பதுபோல், தமிழ்த்தேசிய அமைப்புகளும் பல்வேறு குழுக்களாக சிதறியே உள்ளார்கள். தலித் அமைப்புகளிலும் அதே போல்தான். பெரியாரைத் தவறாகத் திரித்து விமர்சிப்பவர்களையும், சரியான புரிதல் உள்ளவர்களையும் குறிப்பிட்டு விமர்ச்சித்தல் முக்கியமாகும்.

**இதழ்7 : ஏப்ரல் 2015**

பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு மிகவும் அவசியம் கட்டுரை வந்துள்ளது. இன்றைக்குத் தாழ்த்தப்பட்டோரும், பிற்படுத்தப்பட்டோரும் இட ஒதுக்கீட்டிற்காக பெரியாரும், அம்பேத்காரும் ஆற்றியுள்ள பெரும்பங்களிப்பை உணர்ந்து கொள்ளவும், இருவரையும் எதிர் எதிர் நிலைகளில் வைத்துப் பார்ப்பவர்களுக்கு தெளிவையும் ஏற்படுத்தும் நல்ல கட்டுரை. உத்திரப்பிரதேச பார்ப்பன ஆதிக்கம் கட்டுரையை விட ஒட்டுமொத்த இந்தியாவிலும், தமிழ்நாட்டிலும் உள்ள பார்ப்பன ஆதிக்கம், ஆதிக்க ஜாதி வெறி பற்றி எழுதுவதே நமது தேவையாக இருக்குமென கருதுகிறேன். தோழர் மதிமாறன் பற்றி எழுதப்பட்ட கட்டுரை அவரிடம் நேரிடையாக விவாதிக்கப்பட வேண்டியதே தவிர கட்டுரையாக வெளியிட்டு இருப்பது நல்ல அணுகுமுறையாகத் தெரியவில்லை. இதுபோன்ற அணுகுமுறைகள் சாண் ஏறி முழம் சறுக்கிய கதையாகவே முடியும். தாலி பற்றி வந்துள்ள கட்டுரையும், பெரியாரின் குடி அரசு மேற்கோளும் சிறப்பாக உள்ளது.

**இதழ் 8: மே 2015**

குஷ்பு கோவிலும், கண்ணகி சிலையும் ஒன்றுதான் தலையங்கம் அபத்தமாக உள்ளது. காட்டாறு குழுவினர் திரும்பப் படித்துப் பார்க்கவும். திராவிடனின் பேட்டி சிறப்பு. மாணவர்கள் இன்றைய மீடியா, அரசியல், காதல் இவற்றிற்கு ஆட்படாமல் முழுக்கவனத்துடனும், பெற்றோரின் ஒத்துழைப்புடனும் படித்தால் நல்ல விளைவைக் கொடுக்க முடியும் என்பதற்கான சிறந்த உதாரணமாக திராவிடன் இருப்பதை நேரிடையாக பார்த்த என்னால் உணரமுடிகிறது. நிலக்கொள்ளை அதி அசுரன் கட்டுரை முழுக்க முழுக்க பார்ப்பன எதிர்ப்பை மட்டுமே பேசுகிறது. கார்ப்பரேட் நிறுவனங்களின் சுரண்டலையும், அவர்களின் மேலாதிக்கமே அரசியல்வாதிகளையும், அதிகார வர்க்கத்தையும் ஆட்டிப்படைக்கிறது. வெறும் பார்ப்பன எதிர்ப்பு என்பது முழுமையான, சரியான பார்வை அல்ல.

உலக மயமாகிறது யோகா மோசடி கட்டுரை : யோகாவின் இன்னொரு பக்கத்தை வெளிப்படுத்துகிறது. யோகாவை ஆன்மீகத்துடன் இணைத்து அதை வியாபாரமாக்கும் கார்ப்பரேட் சாமியார்கள் பெருகி வரும் நிலையில், யோகாவை பாஜக ஆதரித்தால் நாம் எதிர்க்க வேண்டும் என்கிற நிலை எடுக்க வேண்டியதில்லை என்பது எனது கருத்து. உடற்பயிற்சி போன்ற வகையில் சேர்க்கப்பட வேண்டியதே யோகாவும். இதை எப்படிச் செய்தால் சரி என்பதை புரிந்துகொள்ளப்பட்டு அதை அனைவரும் ஜிம் க்குப் போவது, நடைப்பயிற்சிக்குப் போவது போல எளிமையாக்கிவிட்டால் கார்ப்பரேட் சாமியார்களின் வியாபாரம் படுத்துவிடும்.

**இதழ் 11 : ஆகஸ்ட் 2015**

அறிவின் வழி உரையாடல் கட்டுரை ஆரோக்கியமான கருத்துப்போராட்டத்தை பரிந்துரைக்கிறது. மொழி பக்தர்களே! கட்டுரை குறித்து: தாய்மொழிக்கல்வியிலேயே படைப்பாற்றலையும், தனித்தன்மையையும் சிறப்பாக வெளிப்படுத்த முடியும். ஆங்கிலம் ஆதிக்கம் செலுத்திவரும் இன்றைய சூழலிலும் ஆரம்பக்கல்வி தாய்மொழியிலேயே இருப்பதே சரியானது. அதைவிடுத்து தாய்மொழியான தமிழைப் புறக்கணிப்பது தமிழை மட்டுமே அறிந்த தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எதிரான நிலையாகும்.

மொழி குறித்த பெரியாரின் பார்வை கல்வி, வேலைவாய்ப்பில், பார்ப்பனர்களுக்கு இணையாகத் தமிழர்கள் வரவேண்டும் என்கிற தளத்திலும், பக்தி மூடநம்பிக்கை என்கிற தளத்திலும் மட்டுமே பார்க்கப்பட்டுள்ளது. இன்றைக்குத் தமிழ் குறித்து நமது நிலைப்பாடு மாறவேண்டும். சமூகத்தளத்தில் தெளிவுபடுத்தப்படவேண்டும். மேட்டூர், கோவை, போன்ற இடங்களில் தாய்த்தமிழ் தொடக்கப்பள்ளிகளை பெரியார் அமைப்பின் தலைவர்களான கொளத்தூர் மணி, கோவை இராமகிருஷ்ணன் இருவரும் நடத்தி வருவது கவனிக்கத்தக்கது. பெரியார் தொண்டர்கள் பலரும் இதுபோன்ற பணிகளில் ஆதரவு தெரிவித்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தாய்மொழியில் ஆரம்பக்கல்வி குறித்து பெரியார் அமைப்புகள் வெளிப்படையாக அறிவித்து செயல்படுவது ஒன்றே நாம் அடித்தட்டு மக்களுக்கு செய்யும் உண்மையான தொண்டாகும். இதே இதழில் விமர்சன மடல் பகுதியில் கவிஞர் தமிழேந்தி மொழி பற்றி குறிப்பிட்டுள்ள கருத்து கவனத்திற்குரியது. (பக் –9)

மது Vs மனு கட்டுரை குறித்து: தனிமனிதன், குடும்பம், சமூகம் சீரழிவதற்கும், சுயநினைவை இழந்து தடுமாறவும் மதுபோதை இருந்து வருகிறது. போதைக்காகவே குடிப்பவர்கள்தான் பெரும் பகுதியினர். தனது ஊதியத்தில் பெரும் பகுதியைக் குடிப்பதற்குச் செலவழித்துவிட்டு, குடும்பத்தினரைப் பட்டினியில் ஆழ்த்துபவர்கள் அடித்தட்டுப் பிரிவினரே அதிகம். மனு சுலோகங்களை முன்வைத்து இன்றைய சமூக யதார்த்தத்தை மறுத்து மதுவை ஆதரிப்பது தவறான நிலைப்பாடே. யோகாவை எதிர்ப்பதும், மதுவை ஆதரிப்பதும் ஒரே வகையைச் சேர்ந்ததே.

மதுவிலக்கை வாக்கு வங்கியாக அரசியல்வாதிகள் பார்ப்பது உண்மையே. அதற்காக நாம் எதிர்நிலை எடுப்பது சரியாகாது. சட்டத்தை மீறிக் குடிப்பவர்களுக்காக ஒட்டுமொத்த சமூகத்தையும் குடிநோயாளர்களாக மாறும் வாய்ப்பை வழங்குவது நியாயமல்ல. ஊழல் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும், கார்ப்பரேட்–பன்னாட்டுக் கொள்ளையர்களும் தங்களது சுரண்டலைத் தொடர குடிமக்களின் குடிபோதை பேருதவியாக இருக்கும் என்பதே உண்மை. தமிழ்நாட்டில் குடித்துவிட்டு வாகனம் ஓட்டுவதால் உயிரழப்பு விபத்துக்கள் அதிகம் நடைபெற்று வருவதையும் நாம் உணர வேண்டாமா? 50, 60 களில் உள்ள பெரியார், அம்பேத்கார் மேற்கொள்களை இன்றைக்கு எடுத்துக் கொள்வது பொருத்தமானது அல்ல. இவை எனது தனிப்பட்ட கருத்துக்களே விவாதத்திற்குரியதே.

# இந்தக் கொஞ்ச காலத்தை ஏன் நமது மனச்சாட்சிக்கு விட்டு விடக் கூடாது?

பொதுவாக நமது பிரசங்கத்தினாலும் "குடி அரசி"னாலும் நான் செய்து வந்த பிரசாரத்தில் அரசியல் இயக்கங்கள் என்பவைகளைக் கண்டித்தேன், அரசியல் தலைவர்கள் என்பவர்களைக் கண்டித்தேன், மதம் என்பதைக் கண்டித்தேன், மதத் தலைவர்கள் என்பவர்களைக் கண்டித்தேன், மதச்சடங்கு என்பவைகளைக் கண்டித்திருக்கிறேன்; குருக்கள் என்பவர்களைக் கண்டித்திருக்கிறேன்; கோவில் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; சாமி என்பதைக் கண்டித்திருக்கிறேன்; வேதம் என்று சொல்வதைக் கண்டித்திருக்கிறேன்; சாஸ்திரம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; புராணம் என்பதைக் கண்டித் திருக்கிறேன்; பார்ப்பனீயம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; ஜாதி என்பதைக் கண்டித்திருக்கிறேன்; அரசாங்கம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; உத்தியோகம் என்பவைகளைக் கண்டித்திருக்கிறேன்; நீதி ஸ்தலம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; நியாயாதிபதி என்பவர்களைக் கண்டித் திருக்கிறேன்; நிர்வாக ஸ்தலங்கள் என்பவைகளைக் கண்டித்திருக்கிறேன்; ஜனப் பிரதிநிதித்துவம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; பிரதிநிதிகள் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; தேர்தல் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; கல்வி என்பதைக் கண்டித்திருக்கிறேன்; சுயராஜ்யம் என்பதைக் கண்டித்திருக் கிறேன்; ஸ்ரீமான்கள் கல்யாணசுந்தர முதலியார், வரதராஜுலு நாயுடு, சி. ராஜகோபாலாச்சாரியார் முதலிய ஒரே துறையில் வேலை செய்து வந்த நண்பர்களைக் கண்டித்திருக்கிறேன்; இன்னும் என்னென்னவற்றையோ யார் யாரையோ கண்டித்திருக்கிறேன், கோபம் வரும்படி வைதும் இருக்கிறேன்;

எதைக் கண்டித்திருக்கிறேன், எதைக்கண்டிக்கவில்லை என்பது எனக்கு ஞாபகத்திற்கு வரமாட்டேன் என்கிறது. இன்னமும் ஏதாவது எழுதலாம் என்று பேனாவை எடுத்தாலும், பேசலாம் என்று வாயைத் திறந்தாலும் கண்டிக்கவும் வையவும் துக்கப்படவுமான நிலைமை ஏற்படுகிறதே ஒழிய வேறில்லை. கண்டிக்கத்தகாத, வையத்தகாத இயக்கமோ, திட்டமோ, அபிப்பிராயமோ என் கண்களுக்குப் படமாட்டேன் என்கிறது. இவைகளன்றி எனது வார்த்தைகளும், எழுத்துகளும், செய்கைகளும் தேசத் துரோகமென்றும், வகுப்புத் துவேஷமென்றும், பிராமணத் துவேசமென்றும், மான நஷ்டமென்றும், அவதூறு என்றும், ராஜதுரோகம் என்றும், ராஜத் துவேஷமென்றும், நாஸ்திகமென்றும், மத தூஷணை என்றும், சிலர் சொல்லவும் ஆத்திரப் படவும் ஆளானேன்.

அரசியல் தலைவர்கள், தேசாபிமானிகள், தேசபக்தர்கள் என்பவர்கள் என்னை வையவும் என்னை தண்டித்து ஜெயிலில் வைக்கும்படி அரசாங்கத்தைக் கெஞ்சவும் ஆளானேன். இந்த இன்பமற்ற காரியங்களை நான் ஏன் செய்ய வேண்டும்? சிலருக்காவது மன வருத்தத்தையும், அதிருப்தியையும் கொடுக்கத்தக்க காரியத்தை ஏன் செய்ய வேண்டும்? என்று நானே யோசிப்பதுண்டு. சிற்சில சமயங்களில் யாரோ எப்படியோ போகட்டும், நாம் ஏன் இக்கவலையும் இவ்வளவு தொல்லையும் அடையவேண்டும்? நமக்கென்ன இதனால் ஜீவனமா? பணம், புகழ், கீர்த்தி, சம்பாதனையா? ஏன் நமக்கு இத்தனை எதிரிகள்? ஒரு பத்திரிகையாவது உதவியுண்டா? ஒரு தலைவராவது உதவியுண்டா? ஒரு தேச பக்தராவது உதவியுண்டா? இமயமலை வெய்யிலில் காய்கிறது என்று குடை பிடிப்பது போல் இருக்கிறது என்பதாக நினைத்து விலகி விடலாமா என்று யோசிப்பதுமுண்டு.

ஆனால் விலகுவதில் தான் என்ன லாபம்? ஏறக்குறைய நமது ஆயுள் காலமும் தீர்ந்துவிட்டது. இனி நாலோ அய்ந்தோ அல்லது அதிகமாயிருந்தால் பத்து வயது காலமோ இருக்கலாம். இந்த கொஞ்ச காலத்தை ஏன் நமது மனச்சாட்சிக்கு விட்டு விடக் கூடாது? விலகித்தான் என்ன பெரிய காரியம் செய்யப் போகிறோம்? என்பதாக கருதி மறுபடியும் இதிலேயே உழன்று கொண்டிருக்கிறோமே அல்லாமல் வேறில்லை. உண்மையில் நாம் முன் சொன்ன அரசியல் மத விஷயம் முதலியதுகளைக் கண்டிக்க நேரிட்டபோது உண்மையான அரசியல் மத இயல் இவைகளை நாம் கண்டிக்கவே இல்லை.

எதைப் பார்த்தாலும் புரட்டும், பித்தலாட்டமும் பெயரைப் பார்த்து ஏமாறத் தகுந்ததாயிருக்கிறதே அல்லாமல் தத்துவங்கள் எல்லாம் நமக்கும் நமது நாட்டுக்கும் ஆபத்தை விளைவிக்கக் கூடியதாகவும் கொஞ்சங் கூட ரிபேர் செய்வதற்கில்லாமல் அடியோடு அழித்து மறுபடியும் புதிதாய் உண்டாக்க வேண்டியதாகவே இருக்கிறது. நமது காலத்தில் இவை திருத்தப்பாடடையும் என்கின்ற நம்பிக்கை கொஞ்சமும் இல்லாவிட்டாலும் வேறு யாராவது மகாத்மாவைப் போன்ற மகான்கள் வந்தால் அவர்களுக்கு பக்குவம் செய்து வைத்திருக்கக் கூடாதா என்றும், அதுவும் முடியாவிட்டால் பலன் எப்படியானாலும் கடமையைச் செய்ய வேண்டியதுதானே என்கிற முடிவும் கிடைக்கிறது.

ஆகவே, இக்கஷ்டமானதும், மனதுக்கு இன்பத்தைக் கொடுக்கக்கூடுமானதுமான இக்காரியத்தில் இறங்கிவிட்டோம். உலகம் ஒப்புக் கொண்டாலும் சரி தள்ளிவிட்டாலும் சரி நமக்கு அதைப்பற்றி கவலையில்லை. நமது கடமையை எப்படி நாம் பிரதானமாய்க் கருதி இறங்கி இருக்கிறோமோ அது போலவே பொது ஜனங்களும், அதாவது இக்கடமையைச் சரி என்று எண்ணியவர்கள் தங்கள் தங்களது கடமையையும் எண்ணி அக் கடமையைச் செலுத்துவார்கள் என்று நம்புகிறோம்.

தோழர் பெரியார் - 'குடி அரசு' ஏட்டின் 3 ஆம் ஆண்டு தொடக்க நாள் தலையங்கம் - 01.05.1927

# "எவருக்கும் அஞ்சாது, எப்பழிக்கும் பின் வாங்காது"

"குடி அரசு" எவருடைய தயவுக்கோ, முகஸ்துதிக்கோ, சுயநல வாழ்வுக்கோ, கீர்த்திக்கோ நடைபெறவில்லை. யோக்கியமாய் உண்மையாய் நடக்கக்கூடிய காலம் வரை நடக்கும். அவ்விதம் நடக்க அதற்கு யோக்கியதை இல்லையானால் தானே மறைந்து விடுமேயல்லாமல் மானங்கெட்டு விலங்குகளைப்போல் உயிர் வாழாது.

தோழர் பெரியார் – 'குடி அரசு' ஏட்டின் 2 ஆம் ஆண்டு தொடக்க நாள் தலையங்கம் – 02.05.1926

"உயர்வு தாழ்வு என்கின்ற உணர்ச்சி ஒழிந்து அனைத்துயிரும் ஒன்றென்னும் உண்மை அறிவு மக்களிடம் வளர்தல் வேண்டும், சமயச் சண்டைகள் ஒழிய வேண்டும். இன்னோக்கங்கள் நிறைவேற உண்மை நெறி பற்றி இவர் எமக்கு இனியர் இவர் எமக்கு மாற்றார் என்கின்ற விருப்பு வெறுப்புகள் இன்றி... நண்பரே ஆயினும் ஆகுக. அவர் தம் சொல்லும் செயலும் கேடு சூழ்வதாயின் அஞ்சாது கண்டித்தொதுக்கப்படும்."

என்று நாம் உலகத்தாருக்கு ஆதியில் வாக்குக்கொடுத்தது போலவே இதுகாறும் ஒரு சிறிதும் மாறுதல் இன்றியும் கள்ளங் கபடின்றியும் தயவு தாக்ஷண்யம் இன்றியும் அது தனக்கு சரி என்று பட்டதை எவருக்கும் அஞ்சாது எப்பழிக்கும் பின் வாங்காது உண்மையுடன் உழைத்து வந்திருக்கின்றது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தோழர் பெரியார் – 'குடி அரசு' ஏட்டின் 4 ஆம் ஆண்டு தொடக்க நாள் தலையங்கம் – 29.04.1928

இது வரை பல எதிரிகள் வெளிப்படையாகவும் திருட்டுத்தனமாகவும் தானாகவும் கூலிக்கும் தனது உண்மை அபிப்பிராயத்திற்கும் தனது சுயநலத் துக்கும் ஆக பலவிதங்களில் எதிர்த்துப் பார்த்து விட்டார்கள். நமது வாசகத் தையும் எழுத்தையும் திரித்தும் பழித்தும் விஷமம் பிரசாரம் செய்தும் பார்த்து விட்டார்கள். இவைகளினாலெல்லாம் 'குடி அரசி'ன் அபிப்பிராயம் பரவுவதிலும் பிரதிகள் உயர்வதிலும் எவ்வித தடையும் ஏற்படவில்லை.

தோழர் பெரியார் – 'குடி அரசு' ஏட்டின் 4 ஆம் ஆண்டு தொடக்க நாள் தலையங்கம் – 29.04.1928

சாதி ஒழிப்பே எனது லட்சியம்!



காட்டாறு மாத இதழ் மேலும் வளர
வாழ்த்துகளுடன்...



மு.சரத்குமார் – திருப்பூர்
85082 99554

# ‘மது எதிர் மனு’ ஒரு விளக்கம்

**காட்டாறு ஏடு பற்றிய திறனாய்வுகளில் மதுவிலக்கு தொடர்பான கட்டுரைக்கு மட்டுமே அதிகமான மாற்றுக்கருத்துக்கள் வந்துள்ளன. எனவே அதுகுறித்து எமது நிலையை விளக்கிவிடுகிறோம்.**

மதுவிலக்கை எதிர்க்கும் தற்காலிக – ஓட்டுக்கான – அரசியல்நிலைப்பாடுகளுக்கு மாறாக நிரந்தரமாகவே டாஸ்மாக்கை மூடவேண்டும் என்பதுதான் காட்டாறின் நோக்கம்.

> “இலாபவெறிகொண்டு ‘குடி’ மக்களுக்குத் தரமற்ற மதுவைத் தொடர்ந்து விற்பனை செய்துவரும் டாஸ்மாக் நிறுவனம் தண்டிக்கப்பட வேண்டும். தரமற்ற பொருட்களைத் தயாரித்த நெஸ்லே நிறுவனத்தின் ‘மேகி’ தடைசெய்யப்பட்டது போல டாஸ்மாக்கில் தற்போது விற்பனையில் உள்ள அனைத்து ப்ராண்டுகளும் தடைசெய்யப்படவேண்டும்.”

என்று தெளிவாகவே எமது கருத்தைப் பதிவுசெய்துள்ளோம். டாஸ்மாக்கை மூடினால் அடுத்த நொடியிலேயே கள்ளச்சாராயம் வரும். காட்டாறு அதையும் கணக்கில்கொண்டு அந்தக் கள்ளச்சாராயத்திற்கும் எதிராகத்தான் நிலைப்பாடு எடுத்துள்ளது. டாஸ்மாக்கும் வேண்டாம், கள்ளுக்கடைகளும் வேண்டாம், கள்ளச் சாராயமும் வேண்டாம். ‘குடிப்பது என் உரிமை’ என்று கூறும் பல இலட்சம்பேருக்கு நாங்கள் பரிந்துரைத்தது சொந்தத் தயாரிப்பைத்தான்.

> “அரசே கள்ளுக்கடைகளை நடத்தினால் டாஸ்மாக்கில் நடந்தது போல தரமற்ற கள் விற்பனைதான் நடக்கும். அதற்காகத் தோப்புகளைத் தேடியும் அலையவும் முடியாது. தனியார் தோப்புகளிலும் கலப்படம் நடக்க வாய்ப்பு உள்ளது. குடி மக்களுக்கு நிரந்தரத் தீர்வு என்றால் வீட்டுக்கொரு தென்னை மரம் வளர்ப்போம்! மரத்திற்கொரு கள்ளுப்பானை வைப்போம்! வீடே இல்லாதவன் என்ன செய்வது என்ற கேள்வி வந்தால், மா, பலா, வாழைப்பழம், திராட்சை, நெல்லி போன்று அவ்வப்போது விலை குறைவாகக் கிடைக்கும் பழங்களைக் கொண்டு நாமே சொந்தமாக வீட்டிலேயே மது தயாரித்துப் பயன் படுத்திக்கொள்ளலாம் என்பதையே பதிலாகத் தெரிவிக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.”

இது அனைவருக்குமான ஆலோசனை அல்ல. ‘குடி’ மக்களுக்கு மட்டுமே. எவ்வளவுதான் கள்ளைக் குடித்தாலும் நிலைதடுமாறி விழுந்துவிட மாட்டார்கள். நல்ல தூக்கத்தை மட்டுமே கள் கொடுக்கும். உடலுக்கும் நன்மைதரக்கூடியது கள். அதையும் வணிகரீதியில் மாற்றிவிடாமல் ஒவ்வொரு வீட்டிலும் மரம் வளர்த்துத் தயாரித்துக்கொள்ளச் சொல்வது எவ்வகையிலும் தவறு அல்ல. அவ்வப்போது விலை மலிவாகக் கிடைக்கும் பழங்களிலிருந்து ஒயின் தயாரித்துப் பயன்படுத்திக்கொள்வதும் உடலுக்கோ, குடும்பத்துக்கோ தீங்கு அல்ல. உடலுக்குத் தீங்கு விளைவிக்காத அளவிலுள்ள மதுவைத்தான் காட்டாறு பரிந்துரைக்கிறது.

இதனால் அரசாங்கத்திற்கோ – கள்ளுக்கு மரம் குத்தகைக்கு விடுகின்ற, ஜாதி அடிப்படையில் ஆதிக்கம் செலுத்தும் நிலஉடைமையாளர்களுக்கோ – அனைத்து ஆட்சியிலும் போலிச்சரக்குகளைத் தயாரித்துக் கொள்ளை இலாபம் அடிக்கும் ஆளுங்கட்சிகளின் பொறுப்பாளர்களுக்கோ – மிடாஸ், எஸ்.என்.ஜே போன்ற தமிழ்நாட்டு சாராய நிறுவனங்களுக்கோ – விஜயமல்லையாவின் யுனைட்டட் ஸ்பிரிட் லிமிட்டெட், வடஇந்திய ஷாவாலஸ் போன்ற இந்திய தேசிய முதலாளிகளுக்கோ – இந்திய தேசிய முதலாளிகளுடன் கரம்கோர்த்து சாராயம் தயாரிக்கும் பன்னாட்டு நிறுவனங்களான தென்கொரியவின் ஜின்ரோ, அமெரிக்காவின் பகார்டி, இங்கிலாந்தின் ஜானிவாக்கர், ஸ்மிரின்ஆஃப் போன்ற நிறுவனங்களுக்கோ துளியும் வருமானம் இருக்காது. இந்திய அரசியலில் தேர்தல்களின்போது அவ்வப்போது நடக்கும் மதுவிலக்கு நாடகங்களுக்கும் தேவைஇருக்காது.

குடி என்பது தீங்கான பழக்கம் என்று சொல்வதில் – தீங்கான மதுவைக் குடிக்கும் இந்தக் காலத்தில் இக் கருத்தை ஏற்கலாம். அதற்கு மாற்றாகத்தான் சுகாதாரமான மதுவைப் பரிந்துரைக்கிறோம். ஆனால் அப்பழக்கம் ஒழுக்கமற்றது, பண்பாட்டுக்கு எதிரானது என்று சொல்பவர்களிடம் கடுமையாக முரண்பட வேண்டியுள்ளது.

> “உடலுக்குத் தீங்கான எதையும் நாம் யாரும் ‘தவறு’ அல்லது ‘கேடு’ என்று மட்டுமே சொல்கிறோம். ‘ஒழுங்கீனம்’ என்று சொல்வதில்லை. ‘குடி’யை மட்டும் ஒழுக்கக் கேடு எனப் பார்ப்பது, நினைப்பது, சிந்திப்பது என்பது எந்த வகையில் நேர்மையான சிந்தனையாக இருக்கமுடியும்?”
>
> “இவைபோல மதுவைவிடக் கொடியதான எண்ணற்ற பழக்க வழக்கங்களை மேற்கொள்ளும் நாம் – உடலுக்கு மதுவைவிட மிக அதிகமாகத் தீங்குகளையும் நோய்களையும் ஏற்படுத்தும் பழக்க வழக்கங்களைக் கொண்டுள்ள நாம் அவற்றைத் தவறு என்று தான் சொல்கிறோம். எப்போதும் ஒழுக்ககேடானது என்று சொல்வதில்லை. நினைப்பதுமில்லை. ஆனால் மதுவை மட்டும், குடியை மட்டும் ஒழுக்கக் கேடாகப் பார்ப்பது ஏன்? அதுதான் இந்துமதப் பொதுப்புத்தி.”

என்று காட்டாறின் நிலையைக் கட்டுரையிலேயே தெளிவாக விளக்கியுள்ளோம். தேவைப்பட்டால் இன்னும் விரிவாக வரும் இதழ்களில் எழுதுவோம். கொள்கைரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் ‘மது எதிர் மனு’ எங்களுக்குச் சரியாகப்படுகிறது. அதை அப்படியே அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ‘குடி’யைப் போலவே முரண்படுவதற்கும் அனைவருக்கும் உரிமை உண்டு.